கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு

## VII

**KERALA READER - TAMIL (AT)**

**Standard VII**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு

**மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்**

**2016**

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

***Prepared by*** :
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2014, Reprint : 2016
*Type setting*: SCERT Computer Lab
*Printed at :* KBPS, Kakkanad, Kochi - 30
© Government of Kerala • Department of Education

*அன்புள்ள மாணவர்களே,*

மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவி மட்டுமல்ல; அது மனித இனத்தின் ஆத்மாவுமாகும். மொழி காலந்தோறும் வளர்ச்சி பெற்றுவரும் ஒன்று. மொழி இனிமையானது; ஆற்றல் மிக்கது; சிந்தனையைத் தூண்டுவது; நவரசங்களையும் தோற்றுவிப்பது. ஒரு மொழியின் இனிமையும் ஆற்றலும் அதைப் பயன்படுத்து வோரின் மொழி ஆற்றலையும் மொழித்திறனையும் பொறுத்து அமையும். ஒருவர் பயன்படுத்தும் மொழியே அவரது பண்புநலன் களைக் காட்டிக்கொடுத்துவிடும் என்பார்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல் ஒருவரது படைப்பின் ஆற்றல் அவரது மொழியில் தெரியும் எனலாம். பள்ளிப் பாடங்கள் வெறும் கருத்துகளை மட்டும் உணர்த்துவதோடு நின்றுவிடாமல் மொழித் திறனை வளர்த்துக்கொள்ளவும் உறுதுணையாக இருக்க வேண்டும். இக்கருத்தினை மனதில்கொண்டே இப்பாடநூல் வடிவமைக்கப் பட்டுள்ளது. பாடங்கள் நல்ல கருத்துகளைத் தரும்படியாகவும், செயல்பாடுகள் நல்ல திறன்களை வளர்த்துக் கொள்ளும்படியாகவும் அமைக்கப்பட்டுள்ளன. ஏழாம் வகுப்பு மாணவர்கள் பெறவேண்டிய கற்றல் அடைவுகளைப் பெற்று விட்டார்கள் என்பதை உறுதிப்படுத்து வதாக அமையட்டும் நம் கல்வி.

வாழ்த்துகள்,

**முனைவர். பி. ஏ. பாத்திமா**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

# Textbook Development Committee

## Tamil - VII (AT)

***Members***

Albert Irudhayaraj, R., GHS, Muthalamada, Palakkad.

Balmani. J., ALPS, Chundavarai, Idukki.

Durairaj, S., GHS, Pambanar, Idukki.

Mohana Doss, G., GUPS, Vandiperiyar, Idukki.

Kamaludeen, S., GHS, Muthalamada, Palakkad.

Raju,V., GUPS, Elappara, Idukki.

Dr. Santhoshkumar, G., GHSS, Vagaman, Idukki.

Sunder, K. R., GLPS, BLRam, Idukki.

***Experts***

Dr. Gomathy Nayagam, E., (Rtd.) Guest Lr., University of Madras.

Dr. Nainar,M., Reader (Rtd.), University College, Thiruvananthapuram.

Dr. Parasuraman, T., Associate Prof. , PILC, Pondichery.

Dr. Ratnasabapathy, P., Prof. (Rtd.), IASE, Chennai.

Dr. Subramonia Pillai, C., Prof. (Rtd.), University of Kerala.

Dr. Veerappan, P., Prof. (Rtd.), NCERT, Mysore.

***Artists***

Mohanan, J., SPLTr., (Rtd.), Nedumangad.

Subin, M.S., SPLTr., Kollam.

Nandakumar, C., Chittur, Palakkad

Radhakrishnan, P., Neyyardam, TVM.

***Academic Co-ordinator***

Dr. Sahaya Dhas, D., Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# உள்ளடக்கம்


பக்கம்

*1. சொர்க்க பூமி ........ 7 - 28*

- இயற்கையின் கண்ணீர் ........ 8
- நமக்கு நாமே ........ 17

*2. அனிச்ச மலர் ........ 29 - 51*

- திருக்குறள் ........ 30
- நேர்மை ........ 35
- பொன் ஓணம் ........ 40

*3. இலக்கியச் சோலை... ........ 53 - 66*

- வழிகாட்டிகள் ........ 54
- புதுக்கவிதை இன்பம் ........ 57
- இனிமைத் தமிழ் ........ 59
- ஒரு பிரமுகர் ........ 62

*4. புதுமைப் பூக்கள் ........ 67 - 80*

- நேற்றும் இன்றும் ........ 68
- புதுமைப்பெண்கள் ........ 72
- சாதனைப் பெண்மணிகள் ........ 74

*5. வசந்தத்தைத் தேடி ........ 81 - 93*

- எல்லா உயிரும் என்னுயிரே ........ 82
- கண்ணே கண்மணியே ........ 86
- தாங்க மறந்த விழுதுகள் ........ 90

*அகரமுதலி ........ 94*

# 1

# சொர்க்க பூமி




ஆர்ப்பரிக்கும் அருவிகள், துள்ளி ஓடும் விலங்கினங்கள், பறந்து திரியும் புள்ளினங்கள், அழகுக் கோலமிடும் தாவர இனங்கள், ஆரவாரித்து எழும்பும் அலை கடல், கொட்டும் மழை, விண்ணைத் தொடும் மலைகள், மேகக் கூட்டங்கள் என்று தன் ஒவ்வொரு குழந்தையையும் மனிதனுக்காகவும் அவனது நல வாழ்வுக்காகவுமே ஈந்தளித்திருக்கிறாள் இயற்கை அன்னை. ஆனால் மனிதனோ நன்றி மறந்தவனாய் அந்த அன்னையை அழித்துத் தானும் அழிந்து கொண்டிருக்கிறான்.

ஒரு சிறு புல்லைப் பறிப்பதற்குக் கூட மனிதனுக்கு உரிமை இல்லை.

**உணர்வோம்! இயற்கையைக் காப்போம்.**

# இயற்கையின் கண்ணீர்




## கலந்துரையாடுவோம்

- இதுபோன்ற விளம்பரங்களைப் படித்திருக்கிறீர்களா?
- வயல் வெளிகளில், ஆற்றோரங்களில் வீடுகள் கட்டுவது பற்றி உங்கள் கருத்துகள் என்ன?
- இயற்கைக்கு மாறான செயல்பாடுகள்
  - மணல் அள்ளுதல்
  - மரங்களை வெட்டுதல், காடுகளை அழித்தல்
  - குன்றுகளை இடித்தல்



# இயற்கையைச் சீண்டாதே

வெட்டுதல் நிறுத்தி மரங்களையே
பட்டு விடாமல் காத்திடுவாய்!
காட்டு விலங்குக் கூட்டந்தனைக்
கவனமொடு நீ போற்றிடுவாய்!
இயற்கை காட்டும் வழியினிலே
இயங்கி வந்தால் நன்மைவரும்!
செயற்கை வழியில் செயல்பட்டால்
சீரெல்லாம் அழிந்து துன்பம்வரும்
நிலங்களே வீடாய் மாறிவிடின்
நிலத்தடி நீரும் குறைந்துவிடும்
இலக்குகள் இன்றி நடமாடி
இயற்கையைச் சீண்ட நினையாதே!

– கி. சங்கரநாராயணன்

## ▷ நூற்குறிப்பு

இக்கவிதை 'பூஞ்சோலை' எனும் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றதாகும்.

## ▷ ஆசிரியர் குறிப்பு

பெயர் : கவிஞர் இலத்தூர் கி. சங்கரநாராயணன்; பெற்றோர் : இரா.கிருஷ்ணன், சிவகாமி; பிறப்பு : 29 – 5– 1951; படைப்புகள் : நீலாம்பரி, ஐந்தருவி, தமிழால் வெல்க, அன்பெனும் ஊஞ்சலில், பூஞ்சோலை ஆகிய கவிதை நூல்கள்; சிறப்பு : இசைப்பாடல் புனைவதில் வல்லவர். இவருடைய இசைப்பாடல்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுள்ளன.



## செயல்பாடுகள்

### மெட்டமைத்துப் பாடுங்கள்

* **இயற்கையைச் சீண்டாதே** என்ற கவிதைக்கு வெவ்வேறு மெட்டுகள் அமைத்து பாடிப்பாருங்கள். இனிய மெட்டைத் தேர்வுசெய்யுங்கள்.

### கவர்ந்த வரிகள்

* இந்தக் கவிதையில் உங்களைக் கவர்ந்த வரிகள் எவை? ஏன் என்று எழுதுங்கள்.

### மாற்றி எழுதலாம்

* கவிதையை உரைநடை வடிவில் மாற்றி எழுதுங்கள்.

# அழிவை நோக்கி

தாத்தா : குமரா! இன்றைக்குள்ள பத்திரிகைகளை எல்லாம் கொண்டு வா. செய்திகளைப் பார்ப்போம்.



குமரன்: இதோ! வந்து விட்டேன் தாத்தா. நேற்று மூணாறுக்கு அருகில் நிகழ்ந்த மண்சரிவைத் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பாகக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்தபோதே மிகவும் வருத்தமாக இருந்தது. பத்திரிகைகளிலும் அதுபற்றிய செய்திகள்தான் முக்கியச் செய்திகளாக வந்துள்ளன. இந்தாருங்கள் தாத்தா!

தாத்தா : குமரா! இயற்கை வளங்களை அதிகமாகச் சுரண்டுவதே இதுபோன்ற சீரழிவுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது.


குமரன்: என்ன தாத்தா சொல்கிறீர்கள்? புரியவில்லையே!

தாத்தா : ஆமாம் குமரா, ஆறுகளிலும் கடற்கரைகளிலும் மணலை அள்ளுதல், காடுகளை வெட்டி வனங்களை அழித்தல், விளைநிலங்களில் வீடுகள் கட்டுதல், குன்றுகளை இடித்து நகரங்களாக்குதல் இவை எல்லாம் இயற்கைக்கு எதிரான மனிதச் செயல்பாடுகள் அல்லவா?

குமரன்: சரி தாத்தா! இதைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களேன்.

தாத்தா : இயற்கைச் சீற்றங்களை வெள்ளச்சேதம், சூறாவளி, நிலநடுக்கம், நிலச்சரிவு, சுனாமி என்று பல வகையாகச் சொல்லலாம். இவற்றைப் பேரிடர்கள் என்பர். இவற்றால் மனிதர்கள் மட்டுமன்றி, சுற்றுச் சூழல், உயிரினங்கள் அனைத்தும் பாதிப்படைகின்றன.

குமரன்: அப்படியானால் வெள்ளச்சேதம் பற்றிச் சொல்லுங்கள் தாத்தா.



தாத்தா : வழக்கத்திற்கு மாறான வளிமண்டல நிலைமைகள் ஒரு காரணம். கடற்கரைப் பகுதிகளில் சூறாவளி வீசும்போது கடல் மட்டம் உயர்கிறது. கரையோரம் ஆக்கிரமிக்கப்படுகிறது.

புவி அதிர்ச்சி மற்றும் எரிமலைகள் வெடிப்பதனால் ''சுனாமி'' என்ற ஆழிப்பேரலைகள் ஏற்பட்டுக் கடல் நீர் கரையை நோக்கிப் பெருக்கெடுக்கிறது.



தொடர்ச்சியான மழைப் பொழிவு, ஆறுகள் தோன்றும் இடங்களில் அதிகளவு பனி உருகுதல், சில சமயங்களில் ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் அணைக் கட்டுகள் உடைதல் போன்றவற்றாலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

குமரன்: நிலநடுக்கம் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள் தாத்தா!

தாத்தா : புவியின் அடியில் ஏற்படும் மாற்றங்கள், புவியின் உட்பகுதியில் காணப்படும் தீக்கற்குழம்பு ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு நகருதல் இவை காரணமாக நில அதிர்வு ஏற்படலாம்.

குமரன்: 'நில அதிர்வு' பற்றி இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் தாத்தா!

தாத்தா : புவியின் மேற்பகுதியான ஓட்டுப்பகுதி பல தகடுகளால் ஆனது. இவை ஆண்டுதோறும் மெதுவாக நகர்கின்றன. இவ்வாறு நகரும்போது தகடுகள் ஒன்றுடன் ஒன்று மோதுவதாலோ அல்லது ஒரு தகட்டை மற்றொரு தகடு தள்ளுவதாலோ நில அதிர்வு ஏற்படுகிறது. நில அதிர்வினால் பல்வேறு நில மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவை பிளவுப் பள்ளத்தாக்குகள், கண வாய்கள், செங்குத்தான சரிவுகள், நீளமான மலைச்சரிவுகள், ஆறுகளின் போக்கில் மாற்றங்கள் போன்றவையாகும்.

குமரன்: அது சரி! இப்பொழுது நாம் பத்திரிகையில் வாசித்தோமே மண்சரிவு, அதுபற்றிக் கூறுங்கள்.

தாத்தா : நிலச்சரிவில் மண்சரிதல் அதிக வேகமாக ஏற்படுகிறது. இதில் நகரும் பொருட்களின் பரப்பு மிகவும் திட்டவட்டமாகத் தெரிகிறது. அதாவது நகரும் பகுதியை நாம் பார்க்க முடிகிறது.

குமரன்: புரியவில்லையே தாத்தா!

தாத்தா : சரிவுப் பகுதிக்கு மேலுள்ள பகுதிகளில் பெரிய கட்டடங்களைக் கட்டுவதால்

பெரும் அழுத்தம் தோன்றுகிறது. நிலத்திற்கு அடியிலுள்ள பாறையின் தாங்கும் சக்தி குறையும் போதும் நிலச்சரிவு ஏற்படுகிறது. நில அதிர்ச்சியின் காரணமாகவும் நிலச்சரிவு ஏற்படுகிறது.

அதிக மழையின் காரணமாகவும் பாறைகளுக்கு இடையேயுள்ள நுண்துளைகளின் நீர் அழுத்தம் காரணமாகவும், அவைகளுக்கிடையே பிடிப்புத் தன்மை தளர்ந்து விடுவது மண்சரிவிற்குக் காரணமாகிறது.

காடுகளை அழிப்பது, மலைப் பகுதிகளைக் குடைந்தும் வெட்டியும் சாலைகள், இருப்புப் பாதைகள் அமைப்பது, மலைச்சரிவுகளில் உள்ள இயற்கைத் தாவரங்களை அழித்துப் பயிர் நிலங்களாக்குவது போன்றவை இதற்குக் காரணமாகின்றன.

குமரன்: சூறாவளிக் காற்று எவ்வாறு உண்டாகிறது தாத்தா?

தாத்தா : ஒரு பகுதியில் எதிரெதிர் திசையில் குறைவழுத்தமும் அதிக அழுத்தமும் ஏற்படும் போது குறைந்த அழுத்தத்தை ஈடுசெய்யும் பொருட்டு அதிக அழுத்தப்பகுதியிலிருந்து காற்றானது குறைவழுத்தப் பகுதியை நோக்கி வீசும். இது சுழன்று வீசுவதால் இதற்குச் சூறாவளி என்று பெயர். வளி என்றால் காற்று.

வளி மண்டலத்தில் சூறாவளி மிக முக்கியமான ஒரு செயல்முறையாகும். சூறாவளியினால் பலத்த உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் இயற்கைச் சீர்கேடும் ஏற்படுகின்றன.

குமரன்: அது சரி தாத்தா! ஆற்றில் மணல் அள்ளக் கூடாது என்று சொல்கிறார்களே! மணல் அள்ளுவது தப்பா தாத்தா?

தாத்தா : என்னப்பா அப்படிக் கேட்டு விட்டாய்! ஆற்றுப் பகுதியில் மணல் அள்ளுவதால் நம்முடைய நிலத்தடி நீர் ஆதாரம் பெருமளவில் பாதிக்கப்படுமே! அதனால் குடிநீர் பற்றாக்குறையும் ஏற்படும்.

குமரன்: ஐயோ! தாத்தா இவையெல்லாம் கேட்பதற்கே மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றதே.

தாத்தா : குமரா! ஆச்சரியப்பட்டால் மட்டும் போதாது. இப்படி மனிதர்கள் செய்யும் இயற்கைச் சுரண்டல் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படவேண்டும். இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்குக் கடுமையான தண்டனைகள் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே இயற்கையும் நன்றாக இருக்கும். நாமும் நன்றாக இருக்கலாம். புரிந்ததா?

குமரன்: புரிந்தது. மிக்க நன்றி தாத்தா.

# உயிர் தரும் மரமே...



மரம் என்றால் உயிர். இன்னும் சொல்லப் போனால் உயிர்த் தோழன், 'உயிர் காக்கும் தோழன்' என்று மரத்தைச் சுட்டிக்காட்டு வதில் தவறு இல்லை.

பலத்த மழை பெய்தாலும், காட்டு மரங்கள் மண் அரிப்பைத் தடுக் கும். அடர்ந்த மரங்கள் இருந்தால் குளிர்ந்த பனிக்காற்றுப் படலம் நிச்சயம் இருக்கும்.

தூசு தும்புகளை மரத்தின் இலைகள் வடிகட்டி விடுகின்றன. கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளிவிடு வதன் மூலம் காற்று மாசுபடுதலைக் கட்டுப்படுத்துபவை மரங்களே.

மரம் நடுதல், காடுகளைப் பாதுகாத்தல் பசுமைத் தாவரங்களை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகள் வழியாக மண் அரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஒரு மனிதன் ஒரு நாளில் மூன்று சிலிண்டர்கள் அளவு ஆக்சிஜனை சுவாசிக்கிறான். ஒரு சிலிண்டர் விலை சுமார் ரூ.700. ஒரு நாள் ஆக்சிஜன் 2,100 ரூபாய் மதிப்புள்ளது. ஓராண்டுக்கு இது ரூபாய் 7,66,500 க்கு ஏறுகிறது. மனிதனின் சராசரி ஆயுள் 65 வருஷங்கள் என்றால் இந்தச் செலவு ஆகாயத்தைத் தொடும் அளவுக்கு ஐந்துகோடி ரூபாய் ஆகிறது. இது நமக்கு இலவசமாகச் சுற்றிலுமுள்ள மரங்களிலிருந்து கிடைக்கிறது. மரங்களை இயற்கை தந்த பொக்கிஷங்கள் என்று பார்ப்பவர்கள் மிகக் குறைவு. கண்மூடித்தனமாக மரங்கள் வெட்டப்படுகின்றன. இனியாவது நாமெல்லோரும் மரங்களை நட்டு வளர்த்து அவற்றைக் கவனமாகப் பாதுகாப்போமாக!

தகவல் : கே. நிருபமா, பெங்களூரு

மிருகங்களின் வாழ்வாதாரத்திற்கு அடர்த்தியான காடுகள் அவசியம். மரங்களால் தான் மழை பொழிகிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. மரங்களை வெட்டுவது பாவம் மட்டுமல்ல; நமது சந்ததிகளுக்குச் செய்யும் மாபெரும் துரோகமும் ஆகும்.

மரங்களும் செடிகளும் சூரிய ஒளியைப் பயன்படுத்தி அனைத்து உயிரினங் களுக்கும் உணவு படைக்கின்றன. காற்றிலே கலந்துள்ள கரியமில வாயுவை



உட்கொண்டு பிராணவாயுவை இந்த நடமாடாத மரங்கள் வெளிவிடுகின்றன. இந்தப் பிராணவாயு மட்டும் இல்லையென்றால் நடமாடும் மிருகங்களும், மனிதர்களும் நாசமாகி விடுவார்கள்.

காற்றைச் சுத்தப்படுத்திக் குளிர்ச்சியைத் தரும் வேலையை மரங்கள்தான் கூலி வாங்காமல் செய்கின்றன. காட்டு மரங்கள், வெள்ளத்தால் ஏற்படும் திடீர் நிலச் சரிவைத் தடுக்கும் உன்னத வேலையைச் செய்கின்றன. வறண்ட காலத்தில் நிலத்தடி நீரைத் தர வல்லன. காடு வளர்ந்தால்தான் நாடு வளரும். 'மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!' என்பது புதுமொழி! பொன்மொழி!

நாட்டின் வனப்பகுதி மூன்றில் ஒரு பகுதி, அதாவது 33.3 சதவீதம் இருப்பது தான் சமச்சீரான நிலையாகும். மரங்களை வெட்டிக் காடுகளை அழிப்பவன் மனித இனத்துக்கே துரோகம் செய்கிறான்! மரங்கள் இல்லையென்றால் வெள்ளம் ஏற்படுத்தும் சேதத்தையும் மண் அரிப்பையும் தடுத்து நிறுத்த முடியாது.

காடுகளை அழித்து மரம், செடி, கொடிகள் மூலம் பெரும் இலாபம் சம்பாதிப்பவர்கள் ஒருபுறம். மிருகங்களை வேட்டையாடுபவர்கள் இன்னொருபுறம்.

சிப்கோ இயக்கத் தலைவர் திரு. சுந்தர்லால் பஹுகுணா, நர்மதா நதியைக் காப்பாற்றப் போராடும் மேதா பட்கர், அருந்ததிராய் போன்றோர் இயற்கை அழிவுக்கு எதிராகக் குரல் எழுப்பி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள். விலங்குகள் பறவைகள் முதலான உயிரினங்கள் அழியாமல் காப்பாற்ற மேனகா காந்தி முயற்சி எடுக்கிறார்.




## செயல்பாடுகள்

### வாசிக்கலாம்; கண்டுபிடிக்கலாம்

* இயற்கை வளங்கள் எவ்வாறெல்லாம் அழிக்கப்படுகின்றன?
* மரங்களால் ஏற்படும் நன்மைகள் எவை?

### நிறைவு செய்யுங்கள்

**இயற்கை அழிவு** எவ்வாறெல்லாம் நடைபெறுகிறது? சொற்சூரியனை நிறைவு செய்யுங்கள்.




### கவிதை எழுதுவோம்



மரங்களை வெட்டினோம்

________________ குறைந்தது

________________ அள்ளினோம்

________________________

விளைநிலம் அழித்தோம்

________________________

இயற்கையை ________________

________________________

கவிதைக்குப் பொருத்தமான தலைப்புக் கொடுங்கள்.

# நமக்கு நாமே...

சுற்றுச் சூழல் இன்று பெரும் அபாயகரமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. நிலம் மாசடைதல், நீர் மாசடைதல், காற்று மாசடைதல், வான்வெளி மாசடைதல் என்று அனைத்திலும் அழிவின் தொடக்கத்தைக் காண்கின்றோம்.

மனிதன் தனது அறிவியல் முன்னேற்றத்தால் தொழில் வளம் பெருக்கிக் காற்று மண்டலத்தை மாசுமிக்கதாக மாற்றி விட்டான். பெரும் தொழிற்சாலைகள், வாகனங்கள் வெளியேற்றும் நச்சுக் காற்றான கரியமிலவாயு மற்றும் சில வாயுக்கள் சுலபமாக விண்வெளிக்குச் சென்று ஓசோன் படலத்தில் துளைகளை ஏற்படுத்திவிடுகின்றன. ஓசோன் படலத்தின் அழிவு பூமிக்கு ஆபத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

எரிபொருட்கள், வாகனங்கள், சுரங்கங்கள், உருக்காலைகள் கரியமில வாயுவின் உற்பத்திப் பெருக்கில் முதலிடம் பெறுகின்றன. தொழிற்சாலைகள் வெளியேற்றும் பல்வேறு நச்சுக் காற்றுகள் வான்வெளிக்குச் சென்று அங்குள்ள மேகக் கூட்டங் களுடன் கலந்து விடுகின்றன. எனவே மழை அமில மழையாகப் பொழிகின்றது.

மக்களுக்குச் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு ஏற்பட்டால்தான் இந்த இயற்கை அழிவுகளைக் குறைக்க முடியும். சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வைக் கல்வியின் வாயிலாகவும், பிற துறைகளின் வாயிலாகவும் ஏற்படுத்த வேண்டும். உலகில் சென்ற 20 ஆண்டுகளாகச் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு மிக அதிக அளவில் எல்லோர் மனதிலும் தோன்றி வருகிறது.

**ஜூன் 5**
**உலகச் சுற்றுச் சூழல் தினம்**

**செப்டம்பர் 16,**
**ஓசோன் தினம்**

# மாசுக் கட்டுப்பாடும் தனிமனிதனும்

மனிதனை நாகரிகமடைந்த ஒரு சமூக விலங்கு என்று கூறுவதுண்டு. ஆனால், தான் வளரும் இந்த அழகான புவியின் மீது, தொடர்ந்து அன்பு காட்டவும் பரிவு கொள்ளவும் அவன் தவறுவானேயானால், அவனை மேற்கொண்டு நாகரிகமடைந்த விலங்கு என்று அழைக்கவியலாது. மனிதன் இயற்கையை மதிக்க வேண்டும்; நேசிக்கவும் வேண்டும். தனக்குள் உள்ள "அழகை ஆராதிக்கும் இயல்பை" அவன் இழந்து விடக்கூடாது. குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகே தொழிற்சாலைகள் நிறுவப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுக்க ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு.

அதி வேகமான நகரமயமாக்கல், நவீன மயமாக்கல், தொழில் மயமாக்கல் ஆகியவை நகரங்களின் சூழலைக் கெடுக்கும் மோசமான சதிச் செயல்களைச் செய்து வருகின்றன.

சுற்றுச் சூழலைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் வேண்டிய முக்கியத்துவத்தை மனிதன் உணர வேண்டும்.



குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் எவரும் குப்பைகளை எரிக்கக் கூடாது. குப்பைகளை எரிப்பதைத் தவிர்த்துத் தொழு உரம் தயாரிக்க அவற்றைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் மோட்டார் வாகனங்களை அவ்வப்போது சோதித்தும் பராமரித்தும் புகையளவைக் கட்டுப்பாட்டு எல்லைக்குள் நிறுத்த வேண்டும். திரவ எரிபொருட்களுக்குப் பதிலாக, முழுமையாக எரியக் கூடிய, புகை வெளியிடாத எரிவாயுவைப் பயன்படுத்த வேண்டும்.

மின்கலங்கள் மற்றும் சூரிய ஆற்றலால் இயங்கும் மோட்டார் வாகனங்களையும் மின்சார இரயில்களையும் அதிகம் பயன்படுத்துதல் மூலம் காற்று மாசுபடுதலைக் குறைக்கலாம். மிதிவண்டிகளை அதிகமாகப் பயன்படுத்தலாம். ஒருவரால் புகைபிடிக்கும் பழக்கத்தை விட்டொழிக்க முடியுமென்றால் அதுவே சூழலைப் பாதுகாப்பதற்கு அவர் செய்யும் பெருந்தொண்டாக அமையும்.



கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வேலை தேடிக் குடிபெயரும் பழக்கம் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். நகர்ப் புறங்களில் மக்கள்தொகைப் பெருக்கத் தைக் குறைத்து அதன் மூலம் குடிநீர் தட்டுப்பாடு, நீர் மாசுபாடு ஆகிய பிரச் சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

## குறிச்சு வெச்சுக்கங்க!

‘இந்தத் தேதியை உன் காலண்டரில் குறிச்சு வெச்சுக்க’ என்கிற வசனம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். அப்படி நாம் எல்லோருமே குறித்துக் கொள்ள வேண்டிய சில சுற்றுச்சூழல் சம்பந்தமான நாள்கள் இவை.

| | | |
|---|---|---|
| உலக ஈர நிலம் பாதுகாப்பு தினம் | - | பிப்ரவரி 2 |
| உலக வன நாள் | - | மார்ச் 21 |
| உலக தண்ணீர் தினம் | - | மார்ச் 22 |
| பூமி தினம் | - | ஏப்ரல் 22 |
| சர்வதேச உயிர் தினம் | - | ஜூன் 5 |
| உலகப் பாலைவனத் தடுப்பு நாள் | - | ஜூன் 17 |
| வன மகோத்சவம் | - | ஜூலை 1 முதல் 7 வரை |
| சர்வதேச ஓசோன் தினம் | - | செப்டம்பர் 16 |
| வன உயிரின வாரம் | - | அக்டோபர் 1 முதல் 7 வரை |
| இயற்கை வளங்கள் நாள் | - | அக்டோபர் 5 |
| இயற்கைப் பாதுகாப்பு தினம் | - | நவம்பர் 25 |
| தேசிய மாசுக் கட்டுப்பாடு தினம் | - | டிசம்பர் 2 |
| தேசிய எரிசக்தி பாதுகாப்பு நாள் | - | டிசம்பர் 4 |



## செயல்பாடுகள்

### வாசிக்கலாம்; கண்டுபிடிக்கலாம்

* நம்முடைய சுற்றுப்புறம் எவ்வாறெல்லாம் மாசடைகிறது?

# அமுதத்தில் விஷம்

- அவசரமாய்
  சுவாசிக்க வேண்டும்
  காரோட்டி!
  ஊருக்கு வெளியே போ!
  இமைகளை இதமாய் மூடிப்
  புருவமத்தி குறுகுறுக்க
  நுரையீரல் விரிய விரிய
  ஆழமாய்
  அவசரமாய்
  சுதந்திரமாய்ச்
  சுவாசிக்க வேண்டும்
  ஊருக்கு வெளியே போ!

- இந்த நகரத்துக் காற்றில் எனக்கு
  நம்பிக்கை இல்லை
  காற்றின் நிறம் கருப்பு இல்லை
  இதில் பிராணவாயு பிரித்தெடுக்க
  நாசிக்குச் சக்தியில்லை
  சுற்றியுள்ளது காற்றல்ல
  இது பெட்ரோல் டீசலின்
  வளிவடிவம்
  இதைச் சுவாசிப்பதெனில்
  எந்திரமூக்கு
  வேண்டும் எனக்கு

- அணு உலைகளின் பெருமூச்சு
  ஆலைகளின் கருமூச்சு
  தொழிற்சாலைகளின் சுடுமூச்சு
  எல்லாம் கலந்தால்
  அடுத்த நூற்றாண்டில்
  மனிதன் இருப்பானோ?
  இல்லை அடுத்த நூற்றாண்டில்
  காற்று இருக்குமோ?

- பற்று நோய் அறுத்த
  துறவியர்க்கும்
  புற்றுநோய் வருவதேன்?
  அது நஞ்சூட்டிய காற்றின்
  நன்கொடையப்பா!

- பாவிகளே!
  மரணப் படுக்கையில்
  காற்றைத் தள்ளிய
  மாபாவிகளே!
  காற்றே உயிர் குடித்தால்
  இனி தொட்டிலே கல்லறையாகும்.

- புகை பிடித்தீர்கள்
  காற்று ரணமானது
  எந்திரப் புகை எழுந்தது
  காற்று கெட்டிப்பட்டது
  எப்படி சுவாசிப்பது?
  நுரையீரல் இப்போது
  எஃகினால் வேண்டும் எனக்கு


- அவசரமாய்ச்
  சுவாசிக்க வேண்டும்
  காரோட்டி
  ஊருக்கு வெளியே போ!
  அங்கே எனக்கும் முன்னால்
  ஏராளக் கார்கள்
  தேனடையின் தேனீக்களாய்
  மனிதர்கள்!
  கேட்டேன்
  சுவாசிக்க வந்தவர்களாம்
  மூர்ச்சையானேன்!

**- வைரமுத்து**

**பெயர் :** வைரமுத்து, **பெற்றோர்:** இராமசாமி, அங்கம்மாள், **பிறப்பு :** 1953 சூலை 13, **ஊர் :** மெட்டூர், தேனி மாவட்டம். **மனைவி :** பொன்மணி, **பட்டங்கள் :** சாதனா சம்மான், டாக்டர், காப்பியக் கவிஞர், கவி சாம்ராட், கவிப்பேரரசு. **சிறந்த நூல்கள் :** கருவாச்சி காவியம், கள்ளிக்காட்டு இதிகாசம், மூன்றாம் உலகப்போர்.



# சுற்றும் பூமியின் சுற்றுச்சூழல் காப்போம்



- சுற்றுச்சூழல் மாசடைதலைத் தடுப்பதற்கு, ஒருவர் நினைத்தால் முடியாது. எல்லா மக்களும் நினைத்தால் சாத்தியமாகலாம். இதற்கு என்ன செய்யலாம்?
- தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.
- வீடுகள், அலுவலகங்களில் குறைந்தது 2 மரங்களையாவது வளர்க்க வேண்டும்.
- பயணங்களுக்குச் சொந்த வாகனங்களைத் தவிர்த்து, பேருந்தைப் பயன்படுத்தலாம்.
- வழக்கமான குண்டு விளக்குகளுக்குப் பதிலாக 'சி.எப்.எல்', 'எல்.இ.டி' விளக்குகளைப் பயன் படுத்தலாம்.
- குளிரூட்டியில் பயன்படுத்தப்படும் 'காற்று வடிகட்டி'களை மாதத்திற்கு ஒருமுறை யாவது' சுத்தப்படுத்த வேண்டும்.
- வீட்டிலிருந்து புறப்படும் முன், மின்சாதனப் பொருட்கள் அணைக்கப்பட்டுள் ளனவா எனப் பார்க்க வேண்டும்.
- மரம் மற்றும் கிரானைட் கற்களால் செய்யப்படும் பொருட்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
- சூரிய சக்தியில் இயங்கும், நீர் சூடாக்கும் கருவிகளைப் பயன்படுத்தலாம்.
- கடிதம் எழுதுவதைவிட, மின்னஞ்சல் மூலமான தொடர்புகளை அதிகரித்துக் கொள்ளலாம்.
- கடைகளுக்குச் செல்லும்போதே துணிப்பை எடுத்துச் சென்றால், நெகிழிப் பைகளைத் தவிர்க்கலாம்.
- வீடுகளில் மழைநீர் சேகரிப்பு முறைகளை அமல்படுத்த வேண்டும்.
- இதுபோல ஒவ்வொருவரும், அன்றாட வாழ்க்கை முறையில் மாறுதல்களைச் செய்வதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குப் பங்களிக்க முடியும்.

**சுற்றுச் சூழலை மாசுபடுத்தினால் மரண தண்டனை நிச்சயம்**

**நீதி மன்றங்களுக்குச் சீன அரசு அதிகாரம்**

**பிளாஸ்டிக் என்பதற்கு நல்ல தமிழ் 'நெகிழி'**

## மண்ணின் மரணம் – இந்தியாவில்

உலகிலேயே அதிக வளம் நிறைந்ததும் பசுமை நிறைந்ததுமான மண் நமது இந்தியாவில் தான் உள்ளது. 3280 லட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள நமது இந்தியாவில் 43.6% அதாவது 1430 லட்சம் ஹெக்டேர் பரப்பில் விவசாயம் செய்யப்படுகிறது. மீதமுள்ள நிலத்தில் 480 லட்சம் ஹெக்டேர் புல்வெளி, 400 லட்சம் ஹெக்டேர் விவசாயத்திற்கு ஏற்ற தரிசு நிலமும் 210 லட்சம் ஹெக்டேர் விவசாயம் செய்ய முடியாத நிலமும் 350 லட்சம் ஹெக்டேர் காடுகளாகவும் அமைந்துள்ளன.

## மண்ணுக்குப் புற்றுநோய் – நெகிழி (பிளாஸ்டிக்)

**பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் தீமைகள் :** தூக்கி எறியும் கேரிபேக், டம்ளர் போன்ற பிளாஸ்டிக் பொருட்கள் எளிதில் மக்குவதில்லை; மறுசுழற்சி செய்ய முடியாது. இவை நிலத்தில் மழைநீரை உட்புக வழிவிடாததால் மண்ணின் தன்மை பாதிக்கிறது. மேலும் பிளாஸ்டிக் வேதிப்பொருட்களால் நிலம் மற்றும் நீரின் தன்மையும் கெடுகின்றன. பிளாஸ்டிக் கழிவுகள் சாக்கடைகளில் தேங்குவதால், அடைப்பு ஏற்பட்டு சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. பிளாஸ்டிக்கை பிற குப்பைகளுடன் எரிக்கும்போது உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய 'டாக்சின்' வாயு வெளி யேறுகிறது. பிளாஸ்டிக் கேரிபேக்குகளில் சூடான உணவுப் பொருட்களைப் பார்சல் செய்யும்போது, வேதிப்பொருள் உணவுடன் கலப்பதால், உடல்நலம் பாதிக்கப்படுகிறது. இந்த உணவை வெளியே எறியும் போது அதை உண்ணக் கூடிய கால்நடைகள் இறக்கும் அபாயமும் உள்ளது.





## செயல்பாடுகள்

### வாசிக்கலாம்; கண்டுபிடிக்கலாம்

- காற்று மாசடைவது பற்றி வைரமுத்து கூறும் கருத்துகள் எவை?
- பிளாஸ்டிக்கால் ஏற்படும் தீமைகள் குறித்து எழுதுக.

### கதையை முழுமை செய்யலாம்

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் கதையை முழுமையாக எழுதுங்கள். பொருத்தமான தலைப்புக் கொடுங்கள்.

ஏலப்பாறை கிராமம் – உலக சுகாதார தினம் – குப்பைகள் – பஞ்சாயத்து அறிவிப்பு – குப்பைகளுக்கு ஏற்றவாறு பரிசு – ஊர்மக்கள் – மூட்டை மூட்டையாகக் குப்பை – ராஜூ, பாட்டி – குடிசை வீடு – குப்பைகள் குறைவு– அதிகக் குப்பைக்கு அதிகப்

பரிசு என எண்ணுதல் - வருந்துதல் - குறைவான குப்பை என்று ராஜூவுக்குப் பரிசு - மகிழ்ச்சி.

### பத்திரிகைச் செய்தி

2013 ஜூலை 24 ஆம் தேதி அடிமாலிக்கு அருகில் உள்ள சீயாப்பாறை என்ற இடத்தில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டு ஏராளமான பேர் மண்ணுக்கு அடியில் புதையுண்டு இறந்து போனார்கள். வாகனங்களும் மண்ணுக்கு அடியில் புதைந்து போயின. இந்த ஆண்டு பருவமழையின்போது ஏற்பட்ட சோகமான சம்பவம் இது. இதை ஒரு பத்திரிகைச் செய்தியாக மாற்றுங்கள்.

### படங்களைப் பாருங்கள்; கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்





### வீட்டுச் சுற்றுப்புறம், பள்ளிச் சுற்றுப்புறம் இவற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்ள நான் மேற்கொள்ளும் செயல்பாடுகள்.

* கண்ட இடத்தில் எச்சில் துப்பமாட்டேன்.
*
*
*
*
*
*
*
*
*

## நிறைவுசெய்வோம்

பாடப்பகுதியை வாசித்து அத்துடன் உங்கள் கருத்துகளையும் இணைத்து அட்டவணையை நிறைவுசெய்யுங்கள்.

| இயற்கை அழிவுச் செயல்கள் | ஏற்படும் பிரச்சினைகள் | தீர்வுகள் |
|---|---|---|
| * காடுகளை அழித்தல் | * வன உயிர்கள் அழிவு<br>* மழைக்குறைவு | * மரம் நடுதல்<br>* மரங்களை வெட்டக்கூடாது |
| | | |
| | | |
| | | |
| | | |

## நான் கற்றுக்கொண்டவை

இந்த அலகைக் கற்றபோது நான் செய்த செயல்பாடுகள்?

*

*

*

*

என்னால் நன்றாகச் செய்ய முடிந்த செயல்பாடுகள். எதனால்?

*

*

*

*

## வேற்றுமை

ஆசிரியர் : மாணவர்களே! இத்தனை நாளும் ஒற்றுமையைப் பற்றித்தான் சொல்லித்தந்துள்ளேன். இன்று வேற்றுமைகளைப் பற்றிச் சொல்லப் போகிறேன்.

மாணவர் : என்ன! வேற்றுமையைப்பற்றியா?

ஆசிரியர் : முதலில் நான் சொல்வதை அப்படியே எழுதிக் கொள்ளுங்கள்.

(ஆசிரியர் நிறுத்தி நிறுத்திச் சொல்ல மாணவர்கள் எழுதுகிறார்கள்)

ஆசிரியர் : பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும். அவ்வாறு வேறுபடுத்திக் காட்டுவதற்கு அடையாளமாகப் பெயர்ச்சொல் தன்னுடைய இறுதியில் சில உருபுகளைப் பெற்றுவரும். அந்த உருபுகளை வேற்றுமை உருபுகள் என்கிறோம். வேற்றுமை எட்டு வகைப்படும். இவற்றுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை.

(வேற்றுமை, உருபு, வேற்றுமை உருபுகள் ஆகிய சொற்களுக்கு மாணவர்கள் அடிக்கோடு இடுகிறார்கள்)

ஆசிரியர் : இன்று வகுப்புக்கு முதலில் வந்தது யார்?

முத்து : முருகன் வந்தான் ஐயா.

ஆசிரியர் : முருகனை முதலில் பார்த்தது யார்?

முத்து : முருகனை முதலில் மாணிக்கம் பார்த்தான், ஐயா.

(ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார்.)

1. முருகன் வந்தான்
2. முருகனை முதலில் மாணிக்கம் பார்த்தான்.

ஆசிரியர் : முதல் தொடரில் முருகன் என்ற பெயர்ச்சொல் அமைந்துள்ளது. இரண்டாவது தொடரில் அதே பெயர்ச்சொல் முருகனை மாணிக்கம் பார்த்த செய்தியைக் கூறுகிறது. இரண்டாவது தொடரில் முருகன் என்ற பெயர்ச்சொல்லின் பொருள் மாறுபடுகிறது. இம்மாறுபாட்டுக்குரிய காரணம் என்னவெனில் முருகன் என்ற பெயரோடு சேர்ந்துள்ள 'ஐ' எனும் உருபாகும். இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளை வேறு

படுத்துவது வேற்றுமை எனப்படும். பெயர்ச்சொல்லின் இறுதியில் அமைந்து பொருள் வேறுபாட்டைச் செய்யும் உருபுகளை வேற்றுமை உருபுகள் என்று கூறுவர். புரிந்ததா?

இனியா : புரிந்தது போலவும் இருக்கிறது; புரியாதது போலவும் இருக்கிறது. ஐயா.

ஆசிரியர் : (கரும்பலகையில் எழுதுகிறார்)

1. முருகன் கண்டான்
2. முருகனைக் கண்டான்

இந்த இரண்டு தொடர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு புரிகிறதா?

இனியா : நன்றாகப் புரிகிறது. முதல் தொடர் முருகன் யாரோ ஒருவனைப் பார்த் தான் எனவும், இரண்டாவது தொடரானது யாரோ ஒருவன் முருகனைப் பார்த்தான் என்றும் பொருள் வேறுபடுகிறது, ஐயா.

ஆசிரியர் : இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன? நன்றாகச் சிந்தித்துக் கூறுங்கள்.

இனியா : ஐ என்னும் எழுத்து ஐயா.

ஆசிரியர் : நன்று. இவ்வாறு பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபு வேற்றுமை உருபு எனப்படும். இவ்வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

முத்து : ஐயா, முதல் வேற்றுமை என்றால் என்ன?

ஆசிரியர் : இயல்பான பெயர் (எழுவாய்) பயனிலையுடன் முடிந்தால் அது முதல் வேற்றுமை.

(எ.கா.) : முருகன் வந்தான்.

முதல் வேற்றுமைக்குத் தனி உருபு இல்லை.

அருள் : ஐயா, இரண்டாம் வேற்றுமைக்கு உருபு உண்டா?

ஆசிரியர் : உண்டு. இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும். பத்மினி பாட்டைப் படித்தாள். இத்தொடரில் வரும் பாட்டு என்ற சொல் ஐ என்னும் உருபைப் பெற்றுச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டு கிறது.

முகிலன் : ஐயா, மூன்றாம் வேற்றுமை உருபு என்ன?

ஆசிரியர் : மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் என்பன வாகும். இவற்றுள் ஆன், ஒடு என்பன இப்போது வழக்கில் இல்லை.

(எ.கா.) : இப்படம் ஓவியரால் வரையப்பட்டது - ஆல்

தம்பியோடு தங்கை வந்தாள் - ஓடு

தம்பியுடன் நண்பன் வந்தான் - உடன்

அகிலன் : ஐயா, நான்காம் வேற்றுமை உருபு என்ன?

ஆசிரியர் : நான்காம் வேற்றுமை உருபு கு.

(எ.கா.) : ஆசிரியர் முருகனுக்குப் பரிசளித்தார்.

காவியா : ஐயா, ஐந்தாம் வேற்றுமை உருபு என்ன?

ஆசிரியர் : இல், இன், இடம் என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகும்.

(எ.கா.) : அன்பில் சிறந்தவர் அன்னை தெரேசா - இல்

கேரளத்தின் வடக்கெல்லை காசர்கோடு - இன்

அவனிடம் சென்றான் - இடம்

கவிதா : ஆறாம் வேற்றுமையின் உருபு என்ன ஐயா?

ஆசிரியர் : ஆறாம் வேற்றுமை உருபு அது, உடைய

(எ.கா.) : எனது புத்தகம் - அது

என்னுடைய புத்தகம் - உடைய

நீலன் : ஏழாம் வேற்றுமை உருபு பற்றிச் சொல்லுங்கள் ஐயா!

ஆசிரியர் : கண், உள், மேல், கீழ் என்பன ஏழாம் வேற்றுமை உருபுகளாகும். இவற்றுள் கண் தற்போது வழக்கில் இல்லை.

(எ.கா.) பெட்டிக்குள் பணம் இருக்கிறது - உள்

மாடியின்மேல் நூலகம் இருக்கிறது - மேல்

கட்டிலின்கீழ் செருப்பு கிடக்கிறது - கீழ்

பாமா : எட்டாம் வேற்றுமையின் உருபு என்ன, ஐயா?

ஆசிரியர் : எட்டாம் வேற்றுமை உண்டு. உருபு இல்லை. இதனை விளி வேற்றுமை என்பர்.

(எ.கா.)  முருகா, வா!

இதில் முருகன் என்னும் சொல்லில் உள்ள இறுதி எழுத்து 'ன்' கெட்டு, அதற்கு முந்திய எழுத்து நீண்டு (க - கா) அழைத்தல் (விளித்தல்) பொருளைத் தருகிறது. இவ்வாறு பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தல் பொருளில் வருவதை 'விளி வேற்றுமை' என்பர்.

**பயிற்சி :**

* கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உழவர் -------- உழுதனர்.

   (வயலுக்கு, வயலை, வயலின்)

2. மீன் -------- இருக்கிறது.

   (தொட்டி, தொட்டியின்கீழ், தொட்டிக்குள்)

3. லால்பகதூர் சாஸ்திரி ------- உயர்ந்தார்.


   (உழைப்புக்கு, உழைப்பால், உழைப்பை)

* அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டிருக்கும் சொல்லுடன் வேற்றுமை உருபை இணைத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பாப்பா ------- படித்தாள் (பாடம்)
2. அவ்வையார் ------- சிறந்தவர் (அறிவு)
3. கதை எழுதிய ------- பரிசு கிடைத்தது (மாணவர்)
4. ------- இனிது தமிழ் (தேன்)
5. இவை ------- புத்தகங்கள் (என்)

# 2

# அனிச்சமலர்



அன்பு, ஒழுக்கம், விருந்தோம்பல், நன்றி, ஈகை முதலான பல நற் குணங்களையும் வளரச்செய்வதில் பண்பாடும், கலைகளும் பெரும் பங்குவகிக்கின்றன. இவற்றை மாணவர்களிடம் கற்கும் வயதி லேயே உருவாக்க வேண்டும். இதில் பின்னடைவு ஏற்படும் பொழுது உண்டாகும் கலாச்சாரச் சீர்கேடுகள் சமூகத்தைப் பாதிக் கின்றன.

**பண்பாட்டை வளர்ப்போம்**
**நாட்டின் பெருமைகளை உணர்வோம்.**

# திருக்குறள்

## ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
   உயிரினும் ஓம்பப் படும்.
2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
   தேரினும் அஃதே துணை.
3. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
   இழிந்த பிறப்பாய் விடும்.
4. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
   பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.
5. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
   ஒழுக்கம் இலான்கண் உயர்வு.
6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
   ஏதம் படுபாக் கறிந்து.
7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
   எய்துவர் எய்தாப் பழி.
8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
   என்றும் இடும்பை தரும்.
9. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
   வழுக்கியும் வாயாற் சொலல்.
10. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
    கல்லார் அறிவிலா தார்.



**ஆசிரியர் குறிப்பு :** திருவள்ளுவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவரது காலம் கி.மு. 31 ஆம் ஆண்டு என அறிஞர் கூறுவர்.

**நூற்குறிப்பு :** திரு + குறள் = திருக்குறள். திரு – செல்வம், சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத்தன்மை எனப் பல பொருள்கள் கொண்ட ஒருசொல். குறள் – குறைந்த அடிகளை உடையது. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளால் ஆனது. அறம் 38 அதிகாரங்களையும், பொருள் 70 அதிகாரங்களையும், இன்பம் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளன. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றிப் பாராட்டிய பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை.

**திருக்குறளுக்கு உரைசெய்த பதின்மர் (பத்து பேர்)**

| | |
|---|---|
| தருமர் | மணக்குடவர் |
| தாமத்தர் | நச்சர் |
| பரிதி | பரிமேலழகர் |
| திருமலையர் | மல்லர் |
| பரிப்பெருமாள் | காளிங்கர் |

# விருந்தோம்பல்

விருந்தோம்பலின் சிறப்பினை உணர்ந்த பண்டைத் தமிழ் மக்கள் தங்கள் இல்லறக் கடமைகளுள் இன்றியமையாத ஒன்றாக விருந்தோம்பலைக் கருதினர். இவ்வுண்மையை இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

## திருக்குறள் காட்டும் விருந்தோம்பல்

திருவள்ளுவர் விருந்தோம்பலை இன்றியமையாத ஒரு பண்பாகக் காட்டுகிறார். அதற்கென்று ஒரு தனியதிகாரம் வகுத்துப் பத்துக் குறட்பாக்களில் விரித்துரைக்கின்றார்.

வருவோருக்கு விருந்தளித்தல் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைத் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார். விருந்தினர் என்பார் மெல்லிய மனமுடையவர். முன்னர் அறிந்தோரும், அறியாதவரும் விருந்தினராகலாம். விருந்தினரை இன்முகங்காட்டி

வரவேற்று உபசரித்தலே உயர்ந்த பண்பாகும். அதற்கு வள்ளுவர் அனிச்ச மலரை உவமை காட்டித் தெளிவுபடுத்துகிறார்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

முகர்ந்து பார்த்தால் வாடிவிடும் அனிச்ச மலரைப் போல விருந்தினர்கள் சிறிது முகம் வாடினாலும் அதைத் தாங்க மாட்டார்கள்.

## தொல்காப்பியம் கூறும் விருந்தோம்பல்

மக்களின் தலையாய பண்புகளுள் விருந்தினரை ஏற்று உபசரித்தலும் ஒன்று என்பதைத் தொல்காப்பியம்,

விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும்அன்ன கிழவோன் மாண்புகள்

என்று கூறுவதன் மூலம் குடும்பத் தலைவன் தலைவியரின் மாண்புகளுள் தலையாயது விருந்தோம்பல் என்பது தெளிவாகிறது.

## சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல்

கற்பின் சிகரமாம் கண்ணகியின் வழி விருந்தோம்பலின் மேன்மையைப் பறை சாற்றுகிறார் இளங்கோவடிகள். இல்லத்தாரின் இனிய கடனான விருந்தோம்பலின் சிறப்பை உணர்ந்த கண்ணகி கோவலனுடன் வாழ்ந்திருந்த போது விருந்தோம்பலில் ஈடுபட்டாள். கோவலன் பிரிந்து சென்ற பின் விருந்தோம்பல் செய்ய இயலாமல்,

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

என்று வருந்துகின்றாள். இதன்வழி விருந்து உபசரிக்க இயலாதபோது வருந்தும் பண்பு நம் பண்பு என்பதோடு, விருந்து உபசரித்தல் என்பது கணவனும் மனைவியும் சேர்ந்து செய்ய வேண்டிய கடமை என்பதும் புலனாகிறது.

## பெரியபுராணம் காட்டும் விருந்தோம்பல்

சோழ நாட்டில் இளையான்குடி என்னும் ஊரிலே மாறனார் என்ற வேளாளர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியார் கணவர் கருத்தறிந்து நடப்பவர். சிவனடியாரை உண் பித்தலே அவ்விருவர் தம் தொழிலாக இருந்தது. இதனால் குடும்பத்தில் வறுமை மிகுந்தது. ஆயினும் அடியாரை உண்பித்தலில் தவறவில்லை. அவ்விருவரும் தாம் பட்டினி இருந்தேனும் அடியாரை உண்பித்து விருந்தோம்பி வந்தனர்.

ஓர் இரவு. நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. உண்ண எதுவும் இல்லாததால் மாறனாரும் மனைவியும் பட்டினியில் படுத்துக்கிடந்தனர். அந்நேரம் வாசலில் யாரோ கதவு தட்டும் ஓசை. மாறனாரும் மனைவியும் எழுந்து வந்து பார்த்தனர். அங்கே ஒரு சிவனடியார் நின்று கொண்டிருந்தார். சிவபெருமானே அடியார் வேடத்தில் வந்துள்ளார் என்பது மாறனாருக்குத் தெரியாது. அவருக்கு அளிக்க வீட்டில் எதுவும்



இல்லை என்று தெரிந்திருந்தும் இருவரும் இன்முகம் காட்டி அடியவரை வரவேற்றனர். அடியவரின் ஈரத்தைப்போக்கி அவரை உண்பிக்க எதுவுமில்லையே என்று வருந்தியபோது அவரது மனைவியார் தம் கணவரின் துயர் நீங்க அற்புதமாய் வழிகாட்டினார்.

கணவரைப்பார்த்து, "இன்று காலையில் நமது வயலில் விதைத்த நெல்லை எடுத்துக் கொண்டு வாருங்கள், சமையல் செய்து விருந்து படைப்போம்" என்றார். இதைக் கேட்டவுடன் முன்னர் சேர்த்து வைத்த பெருஞ் செல்வத்தை மீண்டும் பெற்றது போன்று அகமகிழ்ந்தார் மாறனார். மழை பெய்து கொண்டிருந்த வெளிச்சம் இல்லாத அவ்விருளிலும் வயலுக்குச் சென்றார். காலால் தடவிச் சென்று அரும்பாடுபட்டு விதைத்த நெல்மணிகளைச் சேகரித்து வேகமாய் வீட்டிற்குத் திரும்பினார். வீட்டு வாசலில் காத்திருந்த அவர்தம் துணைவியார் கணவரிடமிருந்து நெல்லைப் பெற்று, மாறனார் எடுத்துத் தந்த கூரையினை விறகாக்கிச் சமைத்தார். தோட்டத்தில் முளைத்திருந்த இளம் கீரையைப் பறித்து வந்து கறி சமைத்தார். நள்ளிருளில் சிவனடியாருக்கு அமுது படைத்து உபசரித்தார்.

அடியவரின் திருப்பணியில் உள்ளம் மகிழ்ந்த இறைவன் அடியவருக்கு முக்தியினை நல்கினார். விருந்தோம்பலால் இறைவன் திருவடியை அடையலாம் என்னும் உண்மையினைப் பெரியபுராணம் வழி அறிய முடிகிறது.

நாமும் இலக்கியங்கள் காட்டுகின்ற விருந்தோம்பலின் சிறப்பினை உணர்ந்து வாழ்வில் கடைப்பிடித்து மேன்மையடைவோம்.



## செயல்பாடுகள்

### வாசிப்போம்; கண்டுபிடிப்போம்

**கருத்துகளைக் கூறும் குறட்பாக்களை எழுதுங்கள்.**

* ஒழுக்கம் உள்ளவரே உயர்குடியினர். அவ்வொழுக்கம் இல்லாதவர் இழி குடியினர்.
* பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது. அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது.
* ஒழுக்கமுடையோர் மேன்மை அடைவர். ஒழுக்கம் இல்லாதவர் அடையக் கூடாத பழியை அடைவர்.
* நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமைதரும் சொற்களைச் சொல்ல இயலாது.
* உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர், எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.
* திருக்குறள் பற்றி நூற்குறிப்பு எழுதுக.
* திருவள்ளுவரின் வேறு பெயர்கள் எவை?
* அடியார் வேடத்தில் வந்த சிவடியாருக்கு மாறனார் எவ்வாறு உணவளித்தார்?

### திருக்குறளைக் கண்டுபிடிப்போம்

விருந்தோம்பல் என்ற தலைப்பில் வள்ளுவர் கூறும் திருக்குறள்களை சேகரியுங்கள். பொருளையும் எழுதுங்கள்.

### அனுபவக்குறிப்பு

பெற்றோர் இல்லாத நேரத்தில் உங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வந்திருப்பார்கள் அல்லவா? அவர்களை எப்படியெல்லாம் உபசரித்து வரவேற்றீர்கள். உங்கள் அனுபவத்தை எழுதுங்கள்.

### ஒழுங்குபடுத்துவோம்.

வார்த்தைகளை ஒழுங்குபடுத்திக் குறளை எழுதுங்கள்.

* குடிமை ஒழுக்கம் இழுக்கம் உடைமை
  பிறப்பாய் விடும் இழிந்த.
* இழுக்கத்தின் ஒழுக்கத்தின் உரவோர் ஒல்கார்
  படுபாக் ஏதம் கறிந்து

# நேர்மை

அம்மா கொடுத்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப் பார்த்தான் இனியவன். பதினைந்து ரூபாய் இருந்தது.

“இது போதுமா அம்மா?” என்று ஐயத்துடன் கேட்டான், இனியவன்.

“போதுமடா கண்ணு. சாதாரணச் சட்டைத் துணியாக எடுத்துக்கொண்டால் போதும். நான், நம் சீனு மாமாவிடம் சொல்லியிருக்கிறேன். அவர் வேலை பார்க்கிற துணிக் கடைக்குப் போ. அவரே உனக்கு எடுத்துக் கொடுப்பார். எனக்கு வர நேரமில்லை. இப்போது நான் மருத்துவர் வீட்டுக்கு வேலைக்குப் போகவேண்டும்” என்றாள் அம்மா.

இனியவன், அந்த ரூபாய் நோட்டுகளை மடித்துத் தன் சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டான். அவன் சட்டை ஆங்காங்கே நைந்து போயிருந்தது. அந்தச் சட்டையை அடித்துத் துவைக்கவே முடியாது. பஞ்சுப் பஞ்சாகப் போய்விடும். மிகவும் கவனமாகத்தான் துவைக்கவேண்டும். அப்படிக் கவனமாகத் துவைக்க அவன் அம்மாவுக்குத் தான் தெரியும்.



பள்ளிக்கூடத்தில் பிற மாணவர்கள் ஓடி ஆடி விளையாடும்போது, இனியவன் கெட்டிக்காரத்தனமாக ஒதுங்கிக் கொள்வான். இல்லாவிட்டால், விளையாட்டு முனைப்பில் அவனுடைய சட்டையின் கதி என்னவாகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

சட்டையில் போடவேண்டிய ஒட்டுக்களையெல்லாம் போட்டாகிவிட்டது. மரவட்டை மாதிரிச் சுருட்டிச் சுருட்டித் தைத்தும் ஆகிவிட்டது. இனிமேலும் முடியாது என்ற நிலைமையில்தான் புதுச்சட்டை தைக்கும் எண்ணத்தில் இறங்கினாள், அம்மா.

அலகு - 2

பாவம், அவள்தான் என்ன செய்வாள்? அவர்கள் இருவரையும் தவிக்க விட்டுவிட்டு அப்பா செத்துப் போய்விட்டாரே. அம்மா, ஏதோ நாலைந்து வீடுகளில் வேலை செய்வதால்தான் ஒருவழியாகக் காலம் தள்ள முடிகிறது. இந்தப் பதினைந்து ரூபாய் சேர்ப்பதற்குள் உன்பாடு என்பாடு என்றாகிவிட்டது.

ஆனாலும், மகன் கடினப்பட்டுப் படித்து முன்னுக்கு வந்துவிடுவான் என்னும் நம்பிக்கையுடன் அவள் இருந்தாள்.



சட்டைப் பையைத் தொட்டுத்தொட்டுப் பார்த்துக்கொண்டே துணிக்கடைக்கு நடந்தான் இனியவன். சாலை ஓரம், ஓரிடத்தில் ஒரே கும்பல். பம் . . . பம் என்று உடுக்கைச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"வாங்கோ சாமி, வாங்கோ நீங்க நினைக்கிறதெல்லாம் நடக்கும். இந்தத் தாயத்து ஒண்ணு வாங்கிக் கட்டிக்குங்கோ! நற்பேறு உங்களைத் தேடிவரும்!" என்ற குரல் பலமாகக் கேட்டது.

ஓகோ, தாயத்து விற்கிறவன்!

"இந்தத் தாயத்தைக் கட்டிக் கிட்டா, உங்க வறுமை நீங்கும். திருப்தியான நல்ல சாப்பாடு கிடைக்கும். நல்ல துணிமணிங்க கிடைக்கும் . . . "

இனியவன் உள்ளே எட்டிப் பார்த்தான்.

"இந்த ஒரு ரூபாய் செலவைப் பாக்காதீங்க சாமி. இந்த ஒரு தாயத்தாலே உங்களுக்கு ஒரு வேலை கிடைக்கும். வேலையிலே இருக்கிறவங்களுக்கு, மேல் பதவி கிடைக்கும். . . "

கும்பலில் சிலர் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"பொய் இல்லே சாமி, நிஜம்தான். படிக்கிற பையன்கள் இதைக் கட்டிக்கிட்டா,

பரீட்சையைக் கூடச் சுலபமா எழுதிப் பாஸ் பண்ணிடலாம்! என்றான். தாயத்து விற்கிறவன்.

எல்லாரும் சிரித்தார்கள்.

இனியவனும் சிரித்துக்கொண்டே, கும்பலிலிருந்து வெளியேறினான்; கடைக்கு நடந்தான். அம்மாவிடம் இதைப் பற்றியெல்லாம் சொல்லவேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

சிறிது தூரம் சென்றபின் இனியவன், சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தான், பகீர் என்றது. பையிலிருந்த ரூபாய் நோட்டுக்களைக் காணோம்!

"ஐயோ, தாயத்து விற்பவனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது எவனோ திருடிவிட்டானே!"

இனியவனுக்குத் குப்பென்று வியர்த்துவிட்டது. உடம்பு கிடுகிடுவென்று ஆடியது; கண்களில் நீர் வழிந்தது.

"அம்மா எவ்வளவு துன்பப்பட்டுப் பணத்தைச் சேர்த்துக் கொடுத்தாள்! நான், வேடிக்கை பார்க்கப் போய்ப் பணத்தைப் பறிகொடுத்துவிட்டேனே!" என்று கலங்கினான்.

திரும்பிப் போய் பார்த்தான். அங்கே தாயத்து விற்கிறவனையும் காணோம், கும்பலையும் காணோம்!

இனியவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. புதுச்சட்டை தைத்துக் கொள்ளலாம் என்று அவன் எவ்வளவு ஆசையாக இருந்தான்!

"என்னுடைய இந்தக் கிழிந்த சட்டையைப் பார்த்த பிறகும் பணத்தைத் திருடியிருக் கிறானே; அவன் மனம் கல்லா, இரும்பா? வீட்டுக்குப் போய் அம்மாவிடம் என்ன சொல்லுவது?" தனக்குள் புலம்பினான் இனியவன்.


அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சாலை ஓரமாக இருந்த அரச மரத்தின் மேடையில் சோர்வுடன் உட்கார்ந்தான். அங்கே இருந்த பிள்ளையாரைக் கலக்கத்துடன் பார்த்தான்.

நேரமாகிக் கொண்டு வந்தது.

அப்போது, அரசமரத்து வேரின் இடுக்கில், ஒரு காகிதப் பொட்டலம் கிடப்பது தெரிந்தது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான் இனியவன். அதில் முப்பது ரூபாய் இருந்தது!

அவன் பறிகொடுத்தது பதினைந்து ரூபாய். இப்போது கிடைத்திருப்பது முப்பது ரூபாய். ஒன்றுக்கு இரண்டு மடங்காகக் கிடைத்திருக்கிறதே என்று நினைத்தான் அவன்.

ஆனால், சட்டென்று அவன் மனத்தில் ஓர் உறுத்தல். "சே! சிறிது நேரத்திற்குள் என்ன அற்பமான ஆசை வந்துவிட்டது! பாவம் யார் பணமோ? அவர்கள் எதற்கு வைத் திருந்தார்களோ? அதைப்போய் எப்படி என்னுடையதாக்கிக் கொள்ள நினைக்கலாம்?" என்று தன்னைத் தானே திட்டிக்கொண்டான்.



யாராவது தேடிக்கொண்டு வரு கிறார்களா என்று நெடுநேரம் உட் கார்ந்திருந்தான். தேடிக்கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்தான்.

சிறிது நேரத்தில் ஒல்லியான ஒருவர் பரக்கப் பரக்க அங்குமிங்கும் பார்த் துக்கொண்டே வந்தார்.

"தம்பி, தம்பி, இங்கே ஏதாவது காகிதப் பொட்டலம் கிடந்ததா? நீ பார்த்தாயா? அதிலே முப்பது ரூபாய் பணம் வைத்திருந்தேன். என் மனைவிக்கு உடம்பு சரியில்லை. அவளுக்கு மருந்து வாங்க வேண்டிய பணம். சாமியைக் கும்பிட்டுவிட்டுப் போகலாம் என்று இங்கே வந்தேன். ஒருவேளை, இங்கே விழுந்திருக்குமோ என்று தேடி வந்தேன்" என்றார் அவர்.

இனியவன், அந்தக் காகிதப் பொட்டலத்தை எடுத்துக்காட்டி. 'இது தானே'? என்று கேட்டான்.

பொட்டலத்தை அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்துவிட்டு, 'இதுதான் தம்பி! இதுதான்!' என்று மகிழ்ச்சியுடன் சொன்னார் அவர். "தம்பி, உனக்கு எப்படி நன்றி சொல்லுவதென்றே எனக்குத் தெரியவில்லை. உனக்குப் பிறர் பொருளின்மேலே ஆசையில்லாத நல்ல மனம் இருக்கிறது. நீ நன்றாக இருப்பாய்!" என்று அவர் வாழ்த்தி விட்டுப் போனார்.

பணத்தைப் பறிகொடுத்த செய்தியை அம்மாவிடம் எப்படிச் சொல்லுவது என்று கவலையுடன் அரசமரத்து மேடையிலேயே உட்கார்ந்துவிட்டான் இனியவன்.

அதற்குள் அவன் அம்மாவே அவனைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாள்.

"என்னடா கண்ணு, உன்னை எங்கெல்லாம் தேடுவது? ஏன் இங்கே உட்கார்ந்து

இருக்கிறே?” என்று பதற்றத்துடன் கேட்டாள் அம்மா.

இனியவன் தேம்பித்தேம்பி அழுதான். தாயத்து விற்கிறவனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது பணத்தை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டதைச் சொன்னான். அம்மா அப்படியே மலைத்து நின்றுவிட்டாள்.

‘‘பணத்தை வைத்துக்கொண்டு வேடிக்கை பார்த்தது தப்புதாம்மா!’’ என்றான் இனியவன். “அம்மா, நான் இங்கே உட்கார்ந்திருந்தபோது, ஒரு காகிதப் பொட்டலம் கிடந்தது. எடுத்துப் பார்த்தேன். அதில் முப்பது ரூபாய் இருந்தது!” என்றான் இனியவன். “அதை நீ என்ன பண்ணினே?” என்று பரபரப்புடன் கேட்டாள் அம்மா.

“யாராவது தேடிவந்தால் கொடுத்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். பணத்தைத் தவறவிட்டவர் தேடிக்கொண்டு வந்தார். அவரிடம் கொடுத்துவிட்டேன்!”

“கண்ணு!” என்று நாத் தழுதழுக்க, மகனை இறுக அணைத்துக்கொண்டாள் அம்மா. அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

“நீ செய்தது ரொம்ப சரிடா கண்ணு. நமக்கு ஆயிரம் கஷ்டங்கள் வரலாம், நஷ்டங்கள் வரலாம். அதற்காக மற்றவர்கள் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்காக மற்றவர்களை வருத்தப்பட வைக்கக் கூடாது!” என்றாள் அம்மா.

“எனக்குக் கிழிந்துபோன சட்டைதானே இருக்கிறது அம்மா?” என்றான் இனியவன்; மிகுந்த வருத்தத்துடன்.

“சட்டை கிழிந்திருந்தால் என்னடா கண்ணு? மனம்தான் நன்றாக இருக்க வேண்டும். இவ்வளவு கஷ்டத்திலேயும் இந்த வயதிலே உனக்குக் கடவுள் நல்ல மனத்தைக் கொடுத்திருக்கிறாரே! எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதுடா. இன்னும் கொஞ்ச நாளிலே பணம் சேர்த்துப் புதுச்சட்டை தைத்துக் கொள்ளலாம், கடவுள் கொடுப்பார். வா, வீட்டுக்குப் போவோம்!” என்றாள் அம்மா.

அந்த ஏழைத்தாய், நேர்மை தவறாத தன் மகனின் கையைப் பிடித்துக்கொண்டு பெருமையுடன் வீட்டுக்கு நடந்தாள்.

– ஆழி.வே. இராமசாமி



## செயல்பாடுகள்

### பொன்மொழிகள் சேகரிப்போம்

* தாயிற் சிறந்த கோவிலும் இல்லை.
  தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.

இதுபோன்ற நல்லொழுக்கப் பொன்மொழிகளைச் சேகரியுங்கள்.

# பொன் ஓணம்

ஓணம் என்றாலே கேரள மக்களுக்குக் குதூகலம்தான். அந்த அளவுக்கு மக்களின் உயிரோடும் உணர்வோடும் இரண்டறக் கலந்துவிட்ட விழா திருவோணத் திருவிழா. சாதி, மத, இன வேறுபாடு இல்லாமல் அனைத்து மக்களும் ஒன்றாகக் கொண்டாடுவதால் இவ்விழா ஒரு தேசிய விழாவாகக் கருதப்படுகிறது. எவ்வளவுதான் வறுமையில் வாடினாலும் ஒருவர் கூட ஓண விழாவைக் கொண்டாடாமல் இருப்பதில்லை. 'காணம் விற்றும் ஓணம் உண்க' என்பது பழமொழி.



ஓண விழா திருமாலுக்கு எடுக்கும் திருவிழாவாகும். கேரளத்தில் கொண்டாடப்படும் இவ்விழா ஒரு காலத்தில் தென்னகம் முழுவதும் கொண்டாடப் பட்டது. பாண்டிய நாட்டின் தலைநகரமாகிய மதுரை மாநகரிலும் ஓண விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். இச்செய்தி மதுரைக் காஞ்சி என்னும் சங்க இலக்கியத்தில் இடம்பெறுகிறது. அசுரர்களை அழித்த மாயோனுக்கு(திருமால் - மகாவிஷ்ணு) இவ்விழா எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஓண விழாவைக் கொண்டாடுவதற்கான காரணம் கூறும் கதை ஒன்றும் நிலவுகிறது. மகாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்து மலைநாட்டுச் சக்கரவர்த் தியான மகாபலியைப் பாதாள உலகிற்கு அனுப்பி வைத்தார். அப்போது மகாபலி வாமனனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தாராம். ஆண்டிற்கு ஒரு முறை தம் குடிமக்களைக் காண ஒரு வாய்ப்புதர வேண்டும் என்பதுதான் அவ்வேண்டுகோள்.



வாமனனாக வந்த மகாவிஷ்ணுவும் அதற்கு இசைந்தார். அவ்வாறாக மாவலி மன்னன் தன் நாட்டு மக்களைக் காணவரும் நன் னாளே திருவோணத் திருநாள். அந்நாளில் மலை நாடாம் கேரள நாடு விழாக்கோலம் பூண்டு விடும். அகமும் முகமும் மலர ஊர்மக்கள் உற்சாகத்துடன் மாமன்னனை வரவேற்பர். இதுவே ஓண விழா.

மன்னன் தங்களைக் காணவரும் வேளையில் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்விழா கொண்டாடப்படுவதாகவும் கூறுவர்.



ஓணவிழா என்றாலே புத்தாடையும் பூக்களமும் ஓணப்பந்தும் அறுசுவை உணவும் ஆடல்களும் பாடல்களும் நினைவுக்கு வந்துவிடும்.

மலையாள ஆண்டின் முதல் மாதம் சிங்க மாதம். தமிழில் இம்மாதம் ஆவணி எனப்படும். ஆவணி கேரளத்தின் வசந்த காலமும் ஆகும். இம்மாதத்தில் நாடெங்கும் செடிகளும் கொடிகளும் புத்துயிர் பெற்றுப் பூத்துக் குலுங்கும். இதனால் ஓணவிழா வண்ணப்பூக்களின் பூவிழாவாகவும் கருதப்படுகின்றது.

ஓணவிழா சிங்க மாதம் அத்தம் நட்சத்திரத்தன்று ஆரம்பமாகிப் பத்து நாட்கள் நடைபெறும். பத்தாவது நாளான திருவோண தினத்தன்று நிறைவு பெறும். இந்தப் பத்து நாட்களிலும் மக்கள் தங்கள் வீட்டுமுற்றத்தில் வண்ண வண்ணப் பூக்களை வட்டமாக அடுக்கி வைத்து அழகுபடுத்துவர். இதுவே அத்தப் பூக்களம் எனச் சொல்லப்படுகின்றது. முதல் ஒன்பது நாள் மகாபலியையும் பத்தாவது நாள் மகாவிஷ்ணுவையும் நினைவுகூர, பூக்களம் அமைப்பதாகக் கூறுவர்.

ஓணவிழாவின் போது ஒவ்வொரு வீட்டுமுற்றத்திலும் மரக்கிளைகளில் ஊஞ்சல் கட்டுவர். பெரும்பாலும் பெண்களே பாட்டுப்பாடி ஊஞ்சலாடுவர். ஆண்களுக்குரிய விளையாட்டாகப் பந்து விளையாட்டு முதலிடம் பெறும்.




ஓணம் வந்துவிட்டால் வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் மலையாள மக்கள் குடும்ப வீடுகளுக்கு வந்துவிடுவர். இந்நிலையில் பல நாட்கள் பல்வேறு இடங்களில் பிரிந்து வாழும் குடும்ப உறவினர்கள் ஒன்றுசேரும் ஒற்றுமை விழாவாகவும் ஓணவிழா அமைகின்றது.

ஓணம் என்றால் அறுசுவை உணவை மறக்க இயலாது. ஓர் ஓணத்திற்கு உண்ட உணவின் சுவை அடுத்த ஓணம் வரை நாவில் நிலைநிற்கும் என்று பெருமையுடன் கூறுவதுண்டு. குடும்பத்தினர் ஒன்றாக வேலை செய்து, ஒன்றாகச் சமைத்து, ஒன்றாக இருந்து உண்பது ஓணத்தின் தனிச்சிறப்பு என்றே சொல்ல வேண்டும். சோறு, பருப்பு,நெய், பப்படம், சாம்பார், ரசம், புளிசேரி, மோர், அவியல், துவையல், துவரன், பச்சடி, கிச்சடி. காளன், ஓலன், பிரதமன்(பாயாசம்) ஊறுகாய், வற்றல், உப்பேரி, பழம் என ஓணநாள் மதிய உணவு மறக்கமுடியாமல் அமைந்துவிடும். மலையாளத்தில் இதனை ‘ஓண சத்யை’ என்பர்.



கேரள மக்களின் தேசிய விழாவான ஓணவிழா தற்காலத்தில் சுற்றுலா வாரவிழா வாகவும் கொண்டாடப்படுகின்றது. இவ்விழாக்காலத்தில் பொம்மலாட்டம், புலிக்களி, கும்மாட்டிக்களி, ஓணத்துள்ளல் முதலான நாட்டுப் புறக் கலைகள் நாடெங்கும் நிகழ்த்தப் படும். ஓணக்காலத்தில் நடைபெறும் இன்னொரு முக்கிய விளையாட்டுத் தான் படகு விளையாட்டு. இதனை ஒரு போட்டியாகவே நடத்து கின்றனர். தய்... தய்...தக... தய்... தய்... தய்... தோம் என ஒரே குரலில் வஞ்சிப் பாட்டுப் பாடிக்கொண்டு அத்தனைபேரும் ஒரே போல் துடுப்பைத் துழாவிக் கொண்டு நீண்ட படகுகளில் நீரில் பாய்ந்து வரும் காட்சியைக் காண கண் கோடி வேண்டும். ஓணவிழா நிகழ்ச்சிகளைக் காண வெளி நாட்டவர்களும் ஏராளமாக வருவர்.



ஒற்றுமையின், உற்சாகத்தின், மேள தாளங்கள், ஆடல்பாடல்களின், வண்ணங்களின், நல்ல எண்ணங்களின் ஒப்பற்ற ஒரு விழாதான் பொன்னோணத் திருவிழா.

# நாடெல்லாம் திருவிழா

## இந்தியாவை ஒருங்கிணைக்கும் தீபாவளி

ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசி மாத அமாவாசை தினத்தன்று இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. நமது வாழ்க்கையின் இருளைப் போக்கி வாழ்வை ஒளி மிகுந்ததாக ஆக்கும் பண்டிகையாக இது கருதப்படுகிறது. தீபங்களின் வரிசை – தீபாவளி எனப் படுகிறது. தீபாவளியன்று வரிசையாக ஏற்றப்படும் விளக்குகளின் ஒளி மனிதர்களுக்கு ஞானம் தரும் என்பது ஐதீகம்.

## உழவர்களுக்கு ஒரு பண்டிகை

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் – வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்

என்றார் பாரதியார். நமது நாடு விவசாயத்தை நம்பியிருக்கும் நாடு. யோசித்துப் பாருங்கள். நாம் எவ்வளவுதான் தொழில்துறையில் முன்னேறினாலும், வயிற்றுக்கு உணவு என்பது மிகவும் இன்றியமையாதது தானே. உணவுப் பொருளைத் தருபவர்கள் உழவர்கள். அத்தகைய உழவர்களைப் போற்றும் நாள்தான் பொங்கல் திருநாள். எத்தனையோ விழாக்களைத் தமிழர்கள் கொண்டாடினாலும் அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பது பொங்கல் பண்டிகைக்குத் தான். இதைத் தமிழர் திருநாள் என்று கூறுவதே பொருத்தமாகும். தை மாதம் முதல் நாளன்று பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.



## தெலுங்கு – கன்னட வருடப்பிறப்பு

யுகாதி தெலுங்கு மற்றும் கன்னட வருடப்பிறப்பாகும். ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதத்தில் சித்திரை மாத முதல் தேதியில் இந்தப் பண்டிகை வரும். இந்த நாளில்தான் பிரம்மன் உலகத்தைப் படைத்ததாகப் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் இந்த நாளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டால் வெற்றியைக் காணலாம் என்ற நம்பிக்கை நிலவி வருகிறது.

## விஷுக் கணி பார்க்கலாமா?

கேரளத்திலும் புத்தாண்டு, விஷு என்ற பெயரில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படு கிறது. சித்திரை முதல் தேதியிலேயே இந்தப் பண்டி கையும் கொண்டாடப்படுகிறது. இதில் முக்கியமாக விஷுக் கணி பார்க்கும் நிகழ்வு மேற்கொள்ளப்படுகிறது. ஒரு தன்னிறைவான வாழ்க்கைக்குத் தேவையான காய்கள், கனிகள், பூக்கள் அனைத்தையும் வருடத்தின் முதல் நாளில் பார்க்கும் வழக்கமே விஷுக்கணி. விஷு நாளன்று பெரியவர்கள் குழந்தைகளுக்குக் காசு வழங்குவர். இதைக் ‘கை நீட்டம்’ என்று கூறுவர்.

## வண்ணங்களின் திருவிழா ஹோலிப் பண்டிகை

இந்தியாவில் இந்துக்களின் முக்கியமான பண்டிகைகளுள் ஹோலிப் பண்டிகை யும் ஒன்று. ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் பவுர்ணமிக்கு அடுத்த நாள் இது கொண்டாடப்படுகிறது. கடுமையாக வாட்டியெடுக்கும் குளிர் காலத்திலிருந்து வசந்த காலத்தை வரவேற்கும் பண்டிகையாக இது இருக்கிறது.

## புத்த பூர்ணிமா (அ) புத்த ஜெயந்தி

புத்தர் கி.மு. 563-ஆம் ஆண்டு பிறந்தார். அரசகுமாரனாக இருந்த புத்தர் உலகத் துயரங்களைக் கண்டு, அவற்றைக் களை வதற்காகத் துறவுக்கோலம் பூண்டார். கயா என்ற இடத்தில் கடுமையான தவம் புரிந்தார். வைகாசி மாதம் முழுப் பௌர்ணமி நாளில் அவருக்கு ஞானம் கிடைத்தது. அந்த நாளே புத்த பூர் ணிமா என்று அழைக்கப்படுகிறது.



## மகாவீரர் ஜெயந்தி

சமணர்களின் முக்கியப் பண்டிகைகளில் ஒன்றாக மகாவீரர் ஜெயந்தி கொண்டாடப்படுகிறது. மகாவீரரும் புத்தர் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்தார். கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் இந்த மதம் வட இந்தியாவில் தோற்றுவிக்கப் பட்டது. இம்மதத்தைப்

தைப் பரப்பியவர்களுள் முதன்மையானவர் மகாவீரர். உயிர்க் கொலைக்கு எதிராகக் கடுமையான கோட்பாடுகளைக் கொண்டது சமண சமயம்.

### ரம்சான் பண்டிகை



இஸ்லாமியர்களின் மிக முக்கியப் பண்டிகை ரம்சான். ஒவ்வொரு வருடமும் இஸ்லாமிய வருடத்தின் ஒன்பதாவது மாதத்தில் ரம்சான் கொண்டாடப்படுகிறது. இந்த மாதத்தில் இஸ்லாமியர்கள் தொழுகை நோன்பு மற்றும் தானம் ஆகியவற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் தருகிறார்கள்.

### கிறிஸ்துமஸ்



இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் பண்டிகையாகக் கிறிஸ்துமஸ் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 25 ஆம் தேதி கொண்டா டப்படுகிறது. ஆயினும் கிழக்கு மரபுவழித் திருச்சபையினர் இதனை யூலியின் நாள்காட்டியில் டிசம்பர் 25 ஐக் குறிக்கும் நாளான ஜனவரி 7 ஆம் தேதியில் கொண்டாடுகின்றனர்.



## செயல்பாடுகள்

### வாழ்த்து அட்டை தயாரிப்போம்

* கிறிஸ்துமஸ் / தீபாவளி / ஈத் பண்டிகைக்கு உங்கள் நண்பர்களுக்கு அனுப்புவதற்கு வாழ்த்து அட்டைகள் தயாரியுங்கள். உங்கள் வாழ்த்துகளைக் கவிதை வடிவில் எழுதுங்கள்.

### பாடல்கள் சேகரிப்போம்

புத்தம் புது ஓணம் - தோழி பூத்துப் பொலிந்ததடி

அத்தம் முதல் பத்து நாட்கள் ஆடி மகிழ்ந்திடுவோம் - ஊஞ்சல்

ஆடி மகிழ்ந்திடுவோம்.

காயும் கனிகளுமே - தோழி காட்சிக் குவிந்ததடி

ஆயும் மலர் பறித்தே - வீட்டை அழகு செய்திடுவோம் - தோழி

அழகு செய்திடுவோம்.


இதுபோல ஓணத்தோடு தொடர்புடைய பாடல்களைச் சேகரியுங்கள். பாடுங்கள்.

### கேரளமும் ஓணமும்

ஓணம் ஒரு தேசிய விழாவாகும். ஓணத்துடன் தொடர்புடைய கலைகள், விளையாட்டுகள், பூக்களம், விருந்து போன்றவற்றைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து ஓண மலர் வெளியிடுங்கள். மலர் வெளியீட்டிற்கான நிகழ்ச்சிநிரல் தயாரியுங்கள்.

### பூக்கோலம் அமைக்கலாம்.

ஓண விழாவுடன் தொடர்புடைய சொற்களால் பூக்களின் இதழ்களை நிரப்புங்கள். வேண்டுமெனில் இதழ்கள் கூடலாம்.




### நான் கற்றுக்கொண்டவை

இந்த அலகைக் கற்றபோது நான் செய்த செயல்பாடுகள்?

*
*
*
*

என்னால் நன்றாகச் செய்ய முடிந்த செயல்பாடுகள். எதனால்?

*
*
*

## ஆகுபெயர்

(பள்ளி இலக்கிய மன்ற விழா. சிறப்புரையாளரின் உரைத் தலைப்பு ''வாழ்க்கையிலிருந்தே இலக்கணம்'' உரையாற்றுபவர் புலவர் அமுதனார்.)

அன்பார்ந்த மாணவ மாணவியரே! ஆசிரியப் பெருமக்களே! யாவருக்கும் வணக்கம். இன்று உங்களை எல்லாம் சந்தித்து உரையாற்றுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். 'வாழ்க்கையிலிருந்தே இலக்கணம்' என்ற தலைப்பினை எனக்குத் தந்துள்ளார்கள்.

மாணவக் கண்மணிகளே! இலக்கணம் என்பது எங்கோ இருக்கிறது! அதைப் பாடநூலில் வைத்து நம்மைப் படிக்கச் சொல்லுகிறார்கள் என்று உங்களில் பலர் நினைக்கிறீர்கள்! அதனால்தான் இலக்கணம் நமக்குத் தேவையா என்று எண்ணுகிறார்கள். உங்களில் பலர், இலக் கணம் ஏன்? என்று எண்ணுகிறீர்கள். மற்றும் சிலர் இலக்கணம் வீண்! என்ற முடிவுக்கே வந்துவிட்டார்கள். ஆனால், இலக்கணம் தேன்! (மாணாக்கர் கைதட்டுதல்) என்று சொல்லவே, எனக்கு இந்தத் தலைப்பைத் தந்தார்கள் என்று எண்ணுகிறேன்.

மக்களுடைய பேச்சு வழக்கிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் எடுக்கப்பட்டதுதான் இலக்கணம் என்று இலக்கண நூல்கள் கூறு கின்றன. ஆம்! அதுதான் உண்மை. மக்களின் அன்றாட வாழ்வில் பலநிகழ்வுகளை, மக்கள் பேச்சினை, உரையாடலைக் கேட்டு, அவற்றிலிருந்து கிடைக்கும் சொற்கள் – தொடர்கள் ஆகியவற்றுக்கு இலக்கணப் பெயர் சூட்டியவர்களே இலக்கியப் புலவர்கள்.

அவற்றுள் சிலவற்றைத் தொட்டுக் காட்டலாம் என்று நினைக்கிறேன்! தந்தையார் பக்கத்து வீட்டு நண்பரைப் பார்த்துக் கேட்கிறார், "என்ன நேற்று மாலையில் எங்குப் போயிருந்தீர்கள்? அதற்கு நண்பர், புல்லாங்குழல் இசைமேதை ரமணியின் புல்லாங்குழல் கேட்கப் போயிருந்தேன்" என்று சொல்கிறார். அதைக் கேட்ட அப்பா, அவரே ஒரு புல்லாங்குழல் தானே வைத்திருப்பார். அதைக்கேட்டால் தருவாரா? தரமாட்டாரே! என்றார். புல்லாங்குழல் கேட்டேன் என்றால் புல்லாங்குழலிலிருந்து எழும் இனிய இசையைக் கேட்டேன் என்பது

தானே பொருள். அது உங்களுக்கும் புரியும் இல்லையா? இங்குப் புல்லாங்குழல் என்பது குழலைக் குறிக்காமல் அதிலிருந்து வரும் இசையைக் குறித்தது.

இதே போல், அப்பா, மகனைப் பார்த்து, “ரவி! இந்த அழுக்கினை சலவை நிலையத்தில் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வா!” என்று கூறுகிறார். உடனே, மகன், அப்பா சொன்னார் என்பதற்காக ஆடையில் உள்ள அழுக்கினைச் சுரண்டுவதில்லை. அழுக்கான ஆடைகளை எடுத்துக் கொண்டு சலவை நிலையம் செல்லுவார். அழுக்கு என்பது அந்த ஆடைகளைக் குறித்தது.

காலையில் வீட்டுக்குவந்த தயிர்க்காரப்பாட்டி, தம்பி! இந்தத் தயிரைக் கொஞ்சம் இறக்கு! என்று சொன்னவுடன் பையன் வந்து, தயிர்ப் பானையை இறக்கி வைப்பார்; தயிர் என்பது, தயிரைக் குறிக்காமல் தயிர்ப்பானையை உணர்த்தியது இல்லையா?

அதுபோல், நீங்கள் உங்கள் அம்மாவை அவசரமாகக் கூப்பிடு கிறீர்கள் அப்பொழுது, “கொஞ்சம் பொறு! அடுப்பு எரிகிறது. வேலை முடிந்தவுடன் வருகிறேன்” என்று அம்மா கூறுவார். தினமும் ஒரு அடுப்பு எரிந்தால் நம் பொருளாதாரம் என்ன ஆவது? இங்கு அடுப்பு என்பது அடுப்பில் உள்ள விறகுக் கட்டையைக் குறித்தது! இவற்றையெல்லாம் பார்த்த இலக்கணப் புலவர், இவ்வாறெல்லாம் “ஒரு பொருளினுடைய இயற்பெயர் அதனை உணர்த்தாமல், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருவதற்கு, ஆகுபெயர் என்று பெயர் சூட்டினார். (அவையோர் கையொலி எழுப்பி மகிழ்ச்சி தெரிவித்தனர்.) புலவர் அமுதனார்,

மேலும் பல எடுத்துக் காட்டுகளைக்காட்டி, உரை நிகழ்த்தி முடித்தார். (இந்த உரை மாணவர்களிடையே இலக்கணம் பற்றிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. தொடர்ச்சியாக வகுப்பறையில் . . . )

ஆசிரியர் : மாணவர்களே! இன்று காலையில் நம் பள்ளி இலக்கிய மன்றச் சொற்பொழிவை நீங்கள் எல்லாரும் மிகவும் ரசித்துக் கேட்டீர்கள்! இலக்கணம் வாழ்க்கையிலிருந்துதான் எடுக்கப்படுகிறது என்பதைப் புலவர் அமுதனார் உரை மூலம் நன்கு தெரிந்திருப்பீர்கள்.

முத்தழகி : ஆமாம் ஐயா. ஆகுபெயர் நம் அன்றாட வாழ்க்கையில் உள்ளது என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் கூறி எங்களை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்திவிட்டார்.

ஆசிரியர் : நல்லது முத்தழகி! இலக்கண நூல் புலவர்கள் ஆகுபெயர் என்று பெயர் சூட்டியதோடு நின்றுவிடவில்லை. இயங்கும் சூழலுக்கு ஏற்ப அதனை வகைப்படுத்தியும் வைத்துள்ளனர்.

கண்மணி : ஐயா அதைப்பற்றியும் கொஞ்சம் சொல்லுங்களேன்.

ஆசிரியர் : கண்மணிக்கு இலக்கணத்தில் ஆர்வம் வந்துவிட்டது பார்த்தீர்களா; இப்பொழுது ஆகுபெயர் பற்றி மேலும் பார்ப்போம்.

(மல்லிகை பூத்தது என்று ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்) குழந்தைகளே! இந்தத் தொடரைப் படியுங்கள்!

முத்தழகி : மல்லிகை பூத்தது

ஆசிரியர் : சரி! இதில் உள்ள மல்லிகை என்ற சொல் மல்லிகைப் பூவை மட்டும் குறிக்காமல் மல்லிகைச் செடி, இலை அதன் வேர் அனைத்தையும் குறிக்கிறது. ஆனால் பூத்தல் என்ற சிறப்புச் செயல் மல்லிகைப் பூவுக்கு உரியது. மல்லிகை என்பது அதன் அனைத்துப் பகுதியையும் குறித்தாலும் பூத்தல் என்பதால் அதன் உறுப்பாகிய மல்லிகைப் பூவை உணர்த்துகிறது. அதனால் இது . . . . . . (மாணவி குறுக்கிட்டு)

கண்மணி : இது ஓர் ஆகுபெயர் போல் தெரிகிறது. ஆனால் என்ன ஆகுபெயர் என்று தெரியவில்லை ஐயா!

ஆசிரியர் : மல்லிகை என்ற முதற்பொருளின் பெயர் அதன் ஓர் உறுப்பாகிய மலருக்கு ஆகி வந்துள்ளது அல்லவா! அதனால் இதனை முதலாகு பெயர் அல்லது பொருளாகுபெயர் என்று குறிப்பார்களம்மா!

முத்தழகி : சரி ஐயா!

ஆசிரியர் : யாராவது ஒருவர் வேறு எடுத்துக்காட்டு கூறமுடியுமா?

கண்மணி : தாமரை முகம். சரியா ஐயா!

ஆசிரியர் : மிகவும் சரி! உனக்கு, என் பாராட்டுகள்.

ஆசிரியர் : மாணவர்களே! விழாத்தலைவரை வரவேற்கப் பள்ளிக்கூடமே வாசலுக்கு வந்தது என்று அவர் பேசும்பொழுது கூறினார். பள்ளிக் கூடமே வந்தது என்றால் என்ன பொருள்? பள்ளிக்கூடத்தில் உள்ள நாற்காலி, பெஞ்சு எல்லாமா வந்தன? கோபால் நீ சொல்.

கோபால் : இல்லை ஐயா. ஆசிரியர்கள் மாணவர்கள் எல்லாரும் வந்தார்கள் என்பதைத்தான் அப்படிக் கூறினார்.

ஆசிரியர் : இதுவும் ஓர் ஆகுபெயர் தான். என்ன ஆகுபெயர் என்று சொல்ல முடியுமா கோபால்.

கோபால் : பள்ளிக்கூட ஆகுபெயர் ! . . . .

(யாவரும் சிரித்தனர்)

ஆசிரியர் : இல்லை! இல்லை! பள்ளிக்கூடம் என்ற இடத்தின் பெயர் மாணவர் களுக்கு ஆகிவந்தது. இதுபோல் வருவதை இட ஆகுபெயர் என்பார்கள். இன்னொன்று சொல்கிறேன். டிசம்பர் பூத்தது என்று சொல்வோம். கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

முத்தழகி : ஆமாம் ஐயா.

ஆசிரியர் : அதற்கு என்ன பொருள்?

முத்தழகி : டிசம்பர் மாதம் பூக்கும் பூப் பூத்தது என்பது பொருள்.

ஆசிரியர் : இதனை என்ன ஆகுபெயர் என்று கூறலாம்?

கண்மணி : கால ஆகுபெயர் என்று கூறலாமா?

ஆசிரியர் : கூறலாம்! ஏன் என்று சொல்ல முடியுமா?

முத்தழகி : டிசம்பர் என்ற காலத்தின் பெயர், அந்த மாதத்தில் பூக்கும் பூவிற்கு ஆகிவந்தது. ஆதலால் இது கால ஆகுபெயர்! சரிதானே ஐயா.

ஆசிரியர் : மிகவும் சரி. முத்தழகி.

அம்மா கண்மணி! வெற்றிலை நட்டான் என்று சொல்வார்கள். அதை நீ, எப்படிப் புரிந்து கொள்வாய்?

கண்மணி : வெற்றிலை என்றால் இலையைக் குறிக்காமல் அந்தக் கொடியை நட்டு வைத்தான் என்று புரிந்து கொண்டேன்.

ஆசிரியர் : நல்லது! இதுவும் ஓர் ஆகுபெயர்தான். வெற்றிலை என்பது வெற்றிலைக் கொடியின் ஒரு சினை (உறுப்பு) இவ்வாறு இலை என்ற சினைப்பெயர் வெற்றிலைக் கொடி என்ற முதற்பொருளுக்கு ஆகிவருகிறது இல்லையா. அதனால், இதனைச் சினையாகுபெயர் என்று கூறுவார்கள். மற்றொன்று! கோபால் தீபாவளிப் பண்டிகை முடிந்தது. அடுத்த பெரிய பண்டிகை உங்களுக்கு எது?

கோபால் : பொங்கல் திருநாள். ஐயா.

ஆசிரியர் : பொங்கலுக்கு முன்பாக வீட்டை எப்படித் தூய்மைப்படுத்துவீர்கள்?

கோபால் : தூசுதும்புகளைப் போக்குவோம்! வெள்ளையடிப்போம்.

ஆசிரியர் : சரியாகச் சொன்னாய். வெள்ளையடிப்போம் என்று சொன்னாயே, இதில் வெள்ளை என்பது ஒரு நிறம். அந்த நிறத்தையா வீட்டுக்கு அடித்தீர்கள்.

முத்தழகி : இல்லை ஐயா. வெள்ளையான சுண்ணாம்பைத்தான் சுவரில் அடிப்போம்.

ஆசிரியர் : ஆமாம் வெள்ளை என்பது, வெள்ளை நிறமான சுண்ணாம்புக்கு ஆகி வந்தது. பண்புப் பெயர் அதனுடைய பொருளுக்கு ஆகிவருகிறது. அதனால் இதுபோன்றவற்றைப் பண்பு ஆகுபெயர் என்று கூறுவார்கள். பண்பு என்றாலும் குணம் என்றாலும் ஒரே பொருள்தான். அதனால் குணவாகுபெயர் என்றும் கூறலாம். சரி! கோபால், காலையில் நீ, என்ன சாப்பிட்டாய்?

கோபால் : பொங்கல் சாப்பிட்டேன்.

ஆசிரியர் : பொங்கலா? பொங்குதல் என்பது ஒரு தொழில். அந்தத் தொழிலைச் சாப்பிடவில்லை. பொங்குதல் என்ற தொழிலால் கிடைத்த உணவுப் பொருள் பொங்கல் என்று சொல்லப்படுகிறது. அதனை நீ உண்டாய். இவ்வாறு ஒரு தொழிலின் பெயர் அதனால் ஆகிய பொருளுக்கு ஆகி வருவதைத் தொழிலாகுபெயர் என்று கூறுவார்கள். கோபால் இதற்கு வேறு ஒரு உதாரணம் சொல்ல முடியுமா?

கோபால் : முறுக்குத் தின்றேன். சுண்டல் தின்றேன். வற்றல் உண்டேன் சரிதானா ஐயா.

ஆசிரியர் : மிகவும் சரி. சாப்பாட்டு விஷயம் ஆதலால் அது சம்பந்தமானதைச் சொல்லிவிட்டாய் இல்லையா! (எல்லோரும் சிரித்தனர்) கண்மணி இதுவரை என்னென்ன ஆகுபெயர் பார்த்தோம்? உன்னால் சொல்ல முடியுமா?

கண்மணி : பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகு பெயர், குணவாகுபெயர், தொழிலாகுபெயர்

ஆசிரியர் : நல்லது! மேலும் பல ஆகுபெயர்கள் உள்ளன. அவற்றை அடுத்த வகுப்புகளில் படிப்பீர்கள்!




# 3

# இலக்கியச் சோலை

செம்மொழிகளுள் ஒன்றான நம் தமிழ்மொழி இலக்கியச் செழுமையும், இலக்கணச் செறிவும் பெற்ற மொழியாகும். இலக்கியங்கள் கற்பதால் தமிழின் பெருமையும் பழந்தமிழர் வாழ்க்கையும் பற்றி அறிய முடியும்.

நாளைய அறிஞர்களாகிய இன்றைய மாணாக்கர்கள் தமது மொழி இலக்கிய வளத்தை அறிந்து கொள்வது மிகத் தேவை. இக்கல்வி அவர்கள் வாழ்க்கைக்குச் சிறந்த வழி காட்டியாக அமைவதுடன் பல புதிய உருவாக்கங்களுக்கும் வழி வகை செய்யும்.

**இலக்கியச் சோலைக்குள் நுழைவோம்**

**தமிழ் அமுதம் பருகுவோம்.**

# வழிகாட்டிகள்

## சிறுபஞ்சமூலம்

(1) இன்சொல்லான் ஆகுங் கிளைமை இயல்பில்லா
வன்சொல்லான் ஆகும் பகைமைமன் - மென்சொல்லான்
ஆய்வில்லா ஆரருளாம் அவ்வருள் நன்மனத்தான்
வீவில்லா வீடாய் விடும்.

- காரியாசான்

## ஏலாதி

(2) யானை குதிரை பொன் கன்னியே ஆனிரையோடு
ஏனை ஒழிந்த இவை எல்லாம் ஆன் நெய்யால்
எண்ணன் ஆய், மாதவர்க்கு ஊண் ஈந்தான் - வைசிர
வண்ணன் ஆய் வாழ்வான் வகுத்து.

- கணிமேதாவியார்

## புறநானூறு

(3) ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கி,
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

- பொன்முடியார்

**பத்துப்பாட்டு நூல்கள்**

முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.





**எட்டுத்தொகை நூல்கள்**

நற்றிணை, நல்ல குறுந்தொகை, ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புற மென்று
இத்திறத்த எட்டுத் தொகை.

# திருக்குற்றாலக் குறவஞ்சி

குறத்தி மலை வளம் கூறுதல்



(1) வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்
ககனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்
குற்றாலத்திரிகூட மலைஎங்கள் மலையே!

– **திரிகூடராசப்பக் கவிராயர்**

ஆசிரியர் குறிப்பு: திருக்குற்றாலக் குறவஞ்சி நூலை இயற்றியவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசி, திருக்குற்றாலம் ஊர்களுக்கு நடுவில் இருக்கும் மேலகரம் என்னும் ஊரில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். தென் தமிழகத்தை மதுரையிலிருந்து ஆட்சி செய்த நாயக்க மன்னர் களுள் ஒருவராகிய முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கரால் பாராட்டும் பரிசும் பெற்றவர். இவர் திருக்குற்றாலக் குறவஞ்சியோடு, திருக்குற்றால மாலை, திருக்குற்றால உலா, திருக்குற்றாலப் பிள்ளைத்தமிழ், திருக்குற்றாலச் சிலேடை வெண்பா முதலான பல நூல்களையும் இயற்றியுள்ளார்.

1940-களில் குற்றால அருவியில் ஒடுக்கப்பட்ட மக்கள் குளிப்பதற்குப் பெரிய தடை இருந்தது. அப்பொழுது மகாத்மா காந்தி அங்கு வந்து போராட்டம் நடத்திய பிறகுதான் குற்றால அருவியில் குளிக்க அனைவரும் அனுமதிக்கப்பட்டனர். தென்னிந்தியாவின் மூலிகை நீரூற்று என்ற சிறப்புப் பெயர் குற்றாலத்துக்கு உண்டு.



## செயல்பாடுகள்

### வாசிப்போம் கண்டுபிடிப்போம்

* ஏலாதி என்னும் நூற்பெயருக்கு விளக்கம் தருக.
* வீரனின் கடமையாகப் புறநானூறு கூறும் கருத்துகளை எழுதுக.

* குற்றாலக் குறவஞ்சிப் பாடலில் சிவபெருமான் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளார்?
* திரிகூடராசப்பக் கவிராயர் பற்றிக் குறிப்புரை எழுதுங்கள்.

## சொற்களைக் கண்டுபிடிப்போம்

* பாடல்களிலுள்ள எதுகைச் சொற்கள், மோனைச் சொற்கள் இவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

## ஒப்பிடுவோம்

* இனிய உளவாக இன்னாத கூறல்
  கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

என்னும் திருக்குறள் கருத்தோடு சிறுபஞ்சமூலம் பாடலின் கருத்துகளை ஒப்பிட்டு எழுதுக.

## மெட்டமைக்கலாம்.

* குற்றால மலையின் வருணனை கூறும் பாடலைக் குழுக்களாகப் பிரிந்து மெட்டமைத்துப் பாடுங்கள். சிறந்த மெட்டைத் தேர்வு செய்யுங்கள்.

## பொருள் கண்போம்.

* கீழ்க்காணும் சொற்களுக்குப் பொருத்தமான பொருளை அகரமுதலியிலிருந்து கண்டுபிடியுங்கள்.

| | | |
|---|---|---|
| ஆனிரை | சான்றோன் | விழி |
| வேந்தர் | அருஞ்சமம் | வானவர் |
| வானரம் | மந்தி | பிறை |
| செங்கதிரோன் | நல்கல் | |

# புதுக்கவிதை இன்பம்

## இனியொரு விதி செய்வோம்

- இனியொரு
  விதி செய்வோம்
  ஒற்றைச் சக்கரத்தால்
  வண்டி உருளாது
  ஒற்றுமைச் சக்கரத்தால்
  உலகையே
  உருட்டுவோம்!

- எத்தனை உயரமாய்
  எழுந்தாலும்
  அலைகள்
  அடங்கிப் போவது
  கரைகளின் ஒற்றுமையைக்
  கண்ட பிறகுதான்!

- அறுபது கோடியும்
  இணைந்து நடந்தால்
  பாதைகள் கூட
  பயப்படும்!

- துளிகள்தாம் நாம் -
  என்றாலும்
  குடத்தில் எடுத்து நம்மைக்
  குறைக்க முடியாதபடி
  கலந்து கொள்வோம் - ஒரு
  கடலாவோம்.

- வானத்து மேகம் நம்மை
  வார்த்துக் கொண்டாலும்
  மழையாய் மாறி
  மறுபடியும் பொழிவோம்!

- காத்திருக்கும் வரை
  நம் பெயர்
  காற்றென்றே
  இருக்கட்டும் . . .
  புறப்பட்டு விட்டால்
  புயலென்று
  புரிய வைப்போம்!

– மு. மேத்தா



| | | |
|---|---|---|
| பெயர் | : | மு.மேத்தா |
| ஊர் | : | பெரியகுளம் |
| பிறப்பு | : | 5 – 9 –1945 |
| சிறந்த நூல்கள் | : | கண்ணீர்ப் பூக்கள், நந்தவன ஊர்வலம், திருவிழாவில் ஒரு தெருப்பாடகன் |

# ஹைக்கூ கவிதைகள்

- பல்கலைக் கழகம்
  தராத படிப்பினை
  தாத்தா... பாட்டியிடம்.

- அடித்துவிட்டு
  அன்னை அழுதாள்
  வலியில் உறங்கும் குழந்தை.

- பாஷை பழகியபின்
  பேசியது கிளி
  கூண்டைத் திறந்துவிடுங்கள்.

- ஆயுதங்களின் பின்னணியில்
  இரு நாடுகளின்
  அமைதிப் பேச்சு.

- தின்ன தின்ன
  இனிக்கும் நிலா...
  தென்னங்குருத்து.

- காடுகளை வேட்டையாடும்
  ஒரே மிருகம்
  மனிதன்.

- பாதம் பயந்துவிட்டது
  மிதிக்க மிதிக்க நிமிர்கிறதே
  புல்லினம்.

- நகரத்தின் மேல் பறக்கும்
  கருநாகப் பாம்பு
  ஆலைப் புகை.

– புதியவன்



## செயல்பாடுகள்

### பிடித்த வரிகள்

- புதுக்கவிதையில் பிடித்த வரிகள் எவை? ஏன் என்று எழுதுங்கள்.
- அன்பு, பாசம், இயற்கை, மழை, தண்ணீர் போன்ற தலைப்புகளில் புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் எழுதுங்கள்.

**ஐம்பெருங்காப்பியங்கள்**
சிலப்பதிகாரம்,
மணிமேகலை, சீவகசிந்தாமணி,
வளையாபதி, குண்டலகேசி
**ஐஞ்சிறுகாப்பியங்கள்**
சூளாமணி, யசோதர காவியம்,
உதயண குமார காவியம்,
நாககுமார காவியம்,
நீலகேசி

# இனிமைத் தமிழ்

இனிமைத் தமிழ்மொழி எமது-எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது!

– பாரதிதாசனார்

மக்கள் தம் உள்ளக் கருத்தை வெளிப்படுத்த உதவும் கருவி மொழி. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இந்தியாவில் மட்டும் ஆயிரத்து அறுநூறுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. உலகமொழிகள் பலவற்றுள் பழமையான மொழி தமிழ் மொழி.

'தமிழ்' என்னும் சொல்லுக்கு 'இனிமை' என்பது பொருள். இதனை "இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்" என்னும் பிங்கலநிகண்டு கருத்தால் உணரலாம். 'தமிழ்' என்ற சொல்லில் உள்ள 'த்' வல்லினம்; 'ம்' மெல்லினம்; 'ழ்' இடையினம். இது மேலும் ஒரு சிறப்பாகும்.

இத்தகைய தமிழ்மொழி எண்ணற்ற இலக்கிய இலக்கணங்களைப் பெற்றுள்ளது. அவற்றுள் மிகவும் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம். அதில் தமிழ் என்னும் சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது. இதனால் தமிழ் மொழியின் தொன்மையை அறியலாம்.

"தமிழ் மொழி, திராவிட மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளுக்கு மூலம்" என்பது 'கால்டுவெல்' என்ற மேல்நாட்டு அறிஞர் கருத்தாகும்.

உலகில் பழமை வாய்ந்த மொழிகள் எனவாகக் கூறப்படும் மொழிகள் இலத்தீன், கிரீக், சமஸ்கிருதம், தமிழ் ஆகியவையாகும். இவற்றுள் "தமிழ் மட்டுமே உயிருள்ள வழக்கு மொழியாக உள்ளது" என்பது பிரிட்டானிக் கலை களஞ்சியத்தின் கருத்தாகும். தமிழ் மொழியின் வரிவடிவமும் பழமையானதே. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழ் வரிவடிவம் தோன்றியது என்பதும் தொல்காப்பியர் கருத்தாகும்.

"பாட்டு உரைநடையில் செல்லும் பழந்தமிழ்ப்பாவாய் நீதான்
வீட்டிலா இன்பமானால் உன்னை விரும்பிடார் யார்தான் சொல்லாய்?"

என்ற 'புலவர் குழந்தை' அவர்களின் கருத்துக் கேற்ப, தமிழ்மொழி பாட்டாகவும் உரைநடையாகவும் பரவிக்கிடக்கிறது; பவனி வருகிறது.

பாட்டு என்பதும் உரைநடை என்பதும் தமிழ் இலக்கிய வகையினைக் குறிப்பன. தமிழ் இலக்கியங்களுள் பழமையானவை பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு ஆகியவையாகும். இலக்கிய இலக்கணங்களுக்கு

எழுதப்பெற்ற உரைகள் மற்றும் சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், நாடகங்கள் போன்றவை உரைநடை இலக்கியங்கள். மேலும் 96 வகையான சிற்றிலக்கியங்களும் உள்ளன.

நூற்றுக்கணக்கான இலக்கியங்களும் ஐம்பதுக்கும் மேற்பட்ட இலக்கணநூல்களும், ஆயிரக்கணக்கான சிற்றிலக்கியங்களும், உரைநடை நூல்களும் கொண்டு தமிழ்மொழி செழுமையான மொழியாக விளங்குகிறது.

தொன்மையான இத்தமிழ் மொழியைச் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களும் முதல், இடை, கடைச் சங்கங்களை அமைத்து வளர்த்தார்கள். அந்தச் சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் எனப் போற்றப்படுகின்றன.

முச்சங்கப் புலவர் முதல் முந்தாநாள் புலவர் வரை தமிழ்மொழியைத் தம் படைப்புகளால் வளர்த்து வருகின்றார்கள்.

தமிழ் இலக்கியங்களுள் உலகம் போற்றும் இலக்கியமாகத் திகழ்வது திருக்குறள். திருவள்ளுவர் இயற்றிய இந்நூல், ஒரு வாழ்வியல் நூல். மக்கள் வாழும் முறைக்கு வழிகாட்டும் நூல். சாதி, மதம், இனம், மொழி ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு உலக மக்கள் யாவரும் படித்துப் போற்றும் நூல். இது உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

> "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று மகாகவி பாரதியார் புகழ்ந்து கூறுகிறார்.

**_பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்_**

நாலடி நான்மணி நால்நாற்பது ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி – மாமூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாம் கீழ்க் கணக்கு.

தமிழ்மொழி, தொன்மை, இலக்கிய இலக்கண வளமை, தனித்து இயங்கும் தூய்மை, மொழிகள் பலவற்றின் பிறப்புக்கு அடிப்படையான தாய்மை முதலான பல பண்புகள் காரணமாகச் "செம்மொழி" என்னும் தகுதியைப் பெற்றுள்ளது.

தொல்காப்பியம், பத்துப்பாட்டு (10), எட்டுத்தொகை (8), பதினெண்கீழ்க்கணக்கு (18), சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் களவியலுரை ஆகிய நாற்பத்தோரு இலக்கியங்களும் செம்மொழி இலக்கியங்கள் என்னும் தகுதியைப் பெற்றுள்ளன.

எண்ணிற் சிறந்தது தமிழ்; எழுத்திற் சிறந்தது தமிழ்;

பண்ணிற் சிறந்தது தமிழ்; பாரினில் பரந்தது தமிழ்;

கண்ணிற் சிறந்தது தமிழ்; கண்ணிமை சான்றது தமிழ்;

மண்ணிற் சிறந்தது தமிழ்; மாசற்று ஒளிர்வது தமிழ்;

என்ற பழம்பாடலுக்கு ஏற்பப் பல்வேறு சிறப்புகளைப் பெற்ற தமிழ்மொழியை நன்றாகக் கற்போம்! ஒன்றாகக் கற்போம்!

"தேனொக்கும் செந்தமிழே! நீ கனி! நான் கிளி!
வேறென்ன வேண்டும் இனி?"

– பாரதிதாசனார்



## செயல்பாடுகள்

### சிறப்புப் பெயர்களை எழுதுக.

* தமிழ் மொழியின் சிறப்புப் பெயர்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| கன்னித் தமிழ் | ______________ | ______________ |
| செந்தமிழ் | ______________ | ______________ |
| ______________ | ______________ | ______________ |
| ______________ | ______________ | ______________ |

### வர்ணனை எழுதுவோம்.

* கதிரவன் காலையில் உதிக்கும் காட்சியை வர்ணித்து எழுதுங்கள்.



# ஒரு பிரமுகர்

அது ஒரு கிராமத்துச் சாலை! அந்தச் சாலையிலே ஒரு பாழ்மண்டபம். பாழ் மண்டபத்திற்கு எதிரே ஒரு வேல மரம். அந்த வேலமரத்தின் தயவில் அதைப் பற்றிப் படர்ந்திருக்கிறது ஏதோ ஒரு காட்டுக் கொடி. காட்டுக்கொடி தண்டு முற்றி, தலைக் கிழடு தட்டிவிட்டதால், ஒரு பழுப்பு இலை மட்டும் உதிராமல் பூமியை நோக்கி வரம் கேட்கிறது. தண்டின் வேர்ப் பகுதியை ஒட்டி வேலமரத்தில் ஒரு பொந்து. பொந்து வாயிலில், பழுப்பு இலைக்கு நேர் கீழே ஒரு சிறு மண்ணுருண்டை!

மீசையை நீவி விட்டுக்கொண்டு கம்பீரமான ஆகிருதியுடன் வெளியே வந்தது ஒரு பெரிய கட்டெறும்பு!

“உலகத்தைப் பார்த்து ரொம்ப நாளாச்சு…” என்று முனங்கிக்கொண்டே ஏகாந்தமான வனத்தில் தன்னிச்சையுடன் திரியும் ஒரு சிங்கத்தைப் போல் தலையை ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்குத் திருப்பி உலகத்தை நோட்டம் விட்டது எறும்பு!

அவசர அவசரமாய் அதன் எதிரே வந்தது ஒரு சிற்றெறும்பு.

“என்னடா பயலே சவுக்கியமா?” என்று கர்ஜனை புரியும் தோரணையில் சிற்றெறும்பைப் பார்த்துக் குசலம் பேசியது கட்டெறும்பு!

கேட்ட கேள்விக்குப் பதில்கூட சொல்ல முடியாமல் நடு நடுங்கிப்போய், வந்த வழியைப் பார்த்துக்கொண்டு ஓட்டம் பிடித்தது சிற்றெறும்பு.

“உடம்பில் பயம் இருக்கிறதா! பிழைத்துக்கொள்வாய் போ!” என்று முனங்கிக் கொண்டே மறுபடியும் மீசையை நீவி விட்டுக்கொண்டே கட்டெறும்பு எழுந்து நின்று, உலகத்தைப் பார்க்கத் தலையை நிமிர்த்தும்போது…

“இதென்ன குறுக்கே என்னவோ மறைக்கிறதே…”

“ஓ… இந்த மலைதானா?” இரண்டடி முன் நகர்ந்து வந்து மண்ணு ருண்டையின் மேல் தனது முன் கையை வைத்துக் கொண்டு தலை நிமிர்ந்து, சந்தையிலிருந்து.



திரும்பி வரும் மனிதர் களைப் பார்த்தது.

கதாயுதத்தைப் பூமியில் ஊன்றிக்கொண்டு நிற்கும் பீமசேனனைப் பற்றி அதற்குத் தெரியுமோ என்னவோ? அதன் பாவனை அப்படித்தான் இருந்தது.

"யாரது, மனுசப்பசங்களா? சுத்த சோம்பேறிகள்..."

திடீரென்று அதற்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. உலகில் மனுசப்பசங்க ஜாஸ்தியா? நம்ம எறும்புக் கூட்டம் ஜாஸ்தியா?

யோசித்து யோசித்துப் பார்த்தது. அந்தக் கணக்கு அதற்குச் சரிவரவில்லை. 'அவர்களில் யாரையாவது கூப்பிட்டுக் கேட்டால் என்ன? அதுவும் சரிதான்'.

மண்ணுருண்டைக்குப் பின்னே நின்று, தலையை நீட்டி இரண்டு கைகளையும் உயர்த்திக்கொண்டு கடுகு பிளந்தன்ன வாயைத் திறந்து "ஏ, மனுசப்பயல்களா... உங்களில் ஒருவன் இங்கே வாருங்கள்" என்று கர்ஜனை புரிந்தது.

அவ்வளவுதான்! சாலையில் போய்க் கொண்டிருந்த மனிதர்களெல்லாம் சிதறி ஓடினர்...



பாழ் மண்டபத்தில் ஓடி ஒளிந்துகொண்டனர்.

"அடடே, என்னைக் கண்டு உங்களுக்கு இவ்வளவு பயமா? அட கோழைப் பயல்களா?..." என்று கைகளைத் தட்டி ஆரவாரித்துக் கொண்டு மண்ணுருண்டையச் சுற்றிச் சுற்றி ஓடி வந்தது கட்டெறும்பு.

"என்ன இது, இந்த வெய்ய காலத்திலே திடீர்னு மழைப் புடிச்சிக்கிடுத்தே?"

"கோடை மழை அப்படித்தான்"

"பாழ் மண்டபத்திலிருந்த மனிதர்கள் பேசிக்கொண்ட வார்த்தைகள் எறும்புக்குக் கேட்டது. மழையா? என்று அதிசயத்தது எறும்பு".

“இது என்னடா, சுத்தப் பைத்தியக்காரத்தனமா இருக்கே... மழையாமில்லே, நான் கூட வெளிய தானே நிக்கறேன்; வானம் என்னமோ இருட்டி இருக்குங்கறது வாஸ்தவம்தான். அதுக்குள்ளே இவ்வளவு பயமா? சுத்தப் பயந்தாங்கொள்ளிப் பசங்க, மழையாம் மழை!” என்று அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டு குதித்தது எறும்பு...

“இந்த மனுசங்களே இப்படித்தான்; ஒண்ணுமில்லாததுக்கு எல்லாம் பிரமாதப் படுத்துவாங்க” என்று மனிதர்களை நினைத்து வியந்து கொண்டிருக்கையில் வானம் பளீரென ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

பாழ் மண்டபத்தில் ஒதுங்கிய மனிதர்கள் நடையைக் கட்டினர். எறும்பின் கேலிச் சிரிப்பு அவர்கள் காதில் விழவில்லை.

சற்று நேரத்தில், பூமியில் படிந்த நீர்த்திவலைகளிலிருந்து ஆவி கிளம்பியது. உஷ்ணம் தகித்தது.

மற்றொரு கூட்டம் சாலையில் நடந்துகொண்டிருந்தது!

“உஸ்... அப்பா என்ன புழுக்கம்!” என்று ஒருவன் விசிறிக்கொண்டான்.

வேலமரத்தில் படர்ந்திருந்த கொடியிலுள்ள பழுப்பு இலையில் படிந்திருந்த நீர்த் துளிகள் ஒன்றொன்றாய் உருண்டு நடுக்காம்பில் சேர்ந்து பெரிய முத்தாய்த் திரண்டது...

திரண்ட முத்து மெல்லமெல்ல உருண்டது...

கீழே இருந்த மண்ணுருண்டையின் மீது ஆரோகணித்திருந்த கட்டெறும்பின் தலையில் விழுந்த நீர் முத்தைத் தொடர்ந்து பழுப்பு இலையும் உதிர்ந்து மண்ணுருண்டை யின் மீது விழுந்தது.



“ஐயோ... பிரளயம்... பிரளயம்... வானம் இடிந்து விழுந்துவிட்டதே...” என்று கதறியவாறு பழுப்பு இலையை நீக்கிக் கொண்டு வெளியே வந்த கட்டெறும்பு மண்ணுருண்டை கரைந்திருப்பதைக் கண்டு, கூக்குரலிட்டது.

‘‘அடே மனிதர்களே பிழைத்துப் போங்கள்... சீக்கிரம் ஓடுங்கள். பிரளயம் வந்துவிட்டது.... ஓடுங்களடா ஓடுங்கள்...” என்று அலறியவாறு என்னசெய்வது என்று தெரியாமல் பரபரத்து முன்னும்பின்னும் ஓடியது!

“அப்பா என்ன உஷ்ணம்” என்று மேல் துண்டை வீசிக்கொண்டு ஒருவன் மரத்தடியில் ஒதுங்கினான்.

“அட பைத்தியக்கார மனிதர்களே! ஒன்றுமில்லாத தெற்கெல்லாம் உலகமே புரண்டு விட்டதாக ஓடுகிறீர்களே, இப்பொழுது பேராபத்து விளைந்துவிட்ட சமயத்தில் முட்டாள்தனமாக நடந்துகொள்கிறீர்களே... சீ சீ... உங்கள் முகத்தில் விழிக்கக்கூட வெட்கமாயிருக்கிறது.”

“நான் இப்பொழுது எப்படி என்னைப் பாதுகாத்துக்கொள்வேன்? பிரளயம் வந்துவிடும் போல் இருக்கிறதே...” என்று கூவியவாறு விழுந்தடித்து ஓடி, தனது பொந்துக்குள் போய்ப் புகுந்துகொண்டது கட்டெறும்பு!

– ஜெயகாந்தன்





## செயல்பாடுகள்

### இரண்டு சொற்களைக் கண்டுபிடியுங்கள்

மண்ணுருண்டை –

நீர்த்திவலை –

இரண்டடி –

ஒன்றொன்றாய் –

விழுந்தடித்து –

### பொருள் கண்டுபிடியுங்கள்

- பிரளயம்
- ஆகிருதி
- வாஸ்தவம்
- உஷ்ணம்
- குசலம்
- வியப்பு

## நான் கற்றுக்கொண்டவை

இந்த அலகைக் கற்றபோது நான் செய்த செயல்பாடுகள்?

*

*

*

*

என்னால் நன்றாகச்செய்ய முடிந்த செயல்பாடுகள். எதனால்?

*

*

*

# 4

# புதுமைப் பூக்கள்



வரலாற்றோடு, வாழ்வோடு, இயற்கையோடு என்று அனைத்திலும் கலந்து இருப்பவள் பெண். ஆண்களைப் போல அறிவிலும் ஆற்றலிலும் உழைப்பிலும் உயர் பண்புகளிலும் உயர்ந்து நிற்பது பெண்ணினம். பெண்ணியச் சீர்திருத்த எண்ணங்களை மனதில் கொண்டு அமைக்கப்பட்டதே இவ்வலகு.

**பெண்மையை மதிப்போம்**

**பெண்ணினத்தைப் போற்றுவோம்.**

# úSt-ßm Cu-ßm

## கூண்டுக் கிளிகள்

ஐயோ, தாத்தா! இது என்ன கால் விரல்ல காயம்?

தாத்தா, உங்களைத்தான் கேட்கிறேன். கீழே விழுந்துட்டீங்களா?

இல்லம்மா, கோமளாவைக் கூப்பிட்டுக்கிட்டே இருந்தேன். என்னைவிட ரொம்பச் சின்னவளா இருந்தும் ஒரு மரியாதை இல்லாம, ரெண்டு நிமிஷம் கழிச்சு நிதானமா வந்து என்னன்னு கேட்டா. வந்துச்சே பாரு ஒரு கோவம்! அப்படியே காலைத் தூக்கி ஒரு எத்து எத்தினேன் . . .



என்ன சொல்றீங்க தாத்தா! பாட்டி இறந்து 30 வருஷம் ஆச்சு!

கால் வலிச்சப்பறம்தான் தெரிஞ்சது நான் கண்டது சொப்பனம்னு. கட்டில் கம்புல நல்லா கால் இடிச்சிடுச்சு . . .

85 வயது தாத்தா. அவர் மனைவி இறந்து 30 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனாலும் அவர் கனவில் கூடத் தன் மனைவியை இப்படி நடத்தியிருக்கிறார் என்றால், அவர் உயிருடன் இருந்த காலங்களில் எப்படி இருந்திருப்பார்!

பூமியில் உள்ள உயிரினங்களை எல்லாம் அடக்கி ஆண்டுகொண்டிருப்பது மனித இனம். அறிவிலும் நாகரிகத்திலும் மேம்பட்ட இனமாக இருப்பதும் இந்த இனம்தான்.

இரண்டே வகை உள்ள இனம். அதில் ஒரு வகை இன்னொரு வகையை இரண்டாம் தரத்தில் வைத்திருக்கும் வேலையைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக, பலர் சொல்லி போரடித்துப் போச்சென்று ஓரினம் தொடர்ந்து சொல்லும். எள்ளலும் துள்ளலும் நக்கலுமாக எகத்தாளமிடும்.



பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இனம் தோன்றிய நாளாக.

இங்குப் பெண்களுக்கு என்று தனியான சிந்தனைகள் இல்லை. செயல்கள் இல்லை. விருப்பங்கள் இல்லை. லட்சியங்கள் இல்லை. ஆசைகள் இல்லை. எல்லாமே காலம் காலமாக ஆண்களால் உருவாக்கப் பட்டவைதாம். அடக்கமாக இருக்க வேண்டும். நிமிர்ந்து நடக்கக்கூடாது. உரக்கப் பேசக்கூடாது. சிரிக்கக் கூடாது. வசதியாக இல்லாவிட்டாலும் பெண் என்றால் இப் படித்தான் உடை அணிய வேண்டும். இப்படித்தான் சிந்திக்க வேண்டும். இப்படித் தான் செயல்பட வேண்டும். குறிப்பாக, தங்களுக்குக் கீழாகத்தான் நடக்க வேண்டும் என்று ஆண்களிடையே பொதிந்துகிடக்கும் கருத்தே பொதுவான சமூகக் கருத்தா கவும் நிலவுகிறது.

பெண்களைப் பற்றிய ஆண்களின் இத்தகைய மதிப்பீடுகள் அவர்களே உருவாக்கிய மதங்கள், சட்டங்கள், காப்பியங்கள், போதனைகள் மூலமாக வழிவழியாகப் பாதுகாக் கப்பட்டு, பரப்பப்பட்டு வந்துகொண்டிருக்கின்றன.

பெண்கள் பிரச்சினை என்பது உண்மையிலேயே உள்ளதுதானா? அத்தனைப் பெரிய பிரச்சினையா? பெண்கள் எல்லோரும் அடிமைகளாகவா இருக்கிறார்கள்? எதில் இல்லை சுதந்தரம்? பெண்கள்தானே பெண்களுக்கு எதிரி? . . . இப்படிப்பட்ட கேள்விகளைத் தினமும் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

பிரச்சினை என்ற பிறகு பெரிய பிரச்சினை என்ன, சிறிய பிரச்சினை என்ன? எல்லாரும் அடிமைகளாக இல்லாவிட்டாலும் பெரும்பாலும் அடிமைகளாக இருக்கத் தான் செய்கிறார்கள். அடிமைப்பட்டுக் கிடப்பவர்களுக்குத்தான் சுதந்திரத்தின் பொருள் புரியும்.

ஒரு காலத்தில் பெண்களை அடக்கி வைத்திருந்தார்கள். சரி . . . இப்போதுதான் பெண்கள் படிக்கிறார்கள். வேலைக்குச் செல்கிறார்கள். கை நிறையச் சம்பாதிக்கிறார்கள். இதற்கு மேல் என்ன? என்று கேட்கிறார்கள்.

படிப்பு, வேலை என்பதெல்லாம் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு பகுதி என்பதை

மறுக்க முடியாது. படிப்பு, வேலை இருப்பதாலேயே பிரச்சினை தீர்ந்து விடும் என்றும் சொல்லிவிட முடியாது. பெண்களைச் சுற்றியுள்ள கூண்டுகளின் கம்பிகள் சற்றுத் தள்ளி நகர்ந்து போயிருக்கின்றன. அவ்வளவுதான்! உண்மையில் சுதந்திரத்தை நோக்கிப் பெண்கள் செல்லவேண்டிய தூரம் இன்னும் அதிகமாகவே இருக்கிறது.

பெண்கள் பிறக்கும்போதே சந்திக்கும் போராட்டம் அவர்களின் வாழ்வின் இறுதி வரை தொடர்கிறது. ஏழைகள், பணக்காரர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள், கிராமத்தில் இருப்பவர்கள், நகரத்தில் இருப்பவர்கள், வேலைக்குச் செல்பவர்கள், வீட்டிலிருப்பவர்கள் என்ற பேதங்கள் எல்லாம் பெண்கள் பிரச்சினைகளுக்குக் கிடையாது.

சுமார் 1650 ஆண்டுகளுக்கு முன் . . .

பண்டைய எகிப்தில் அலெக்ஸாண்டிரியாவில் கி.பி. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஹைபேஷியா. கிரேக்கம், இத்தாலி, மத்திய தரைக்கடல் நாடுகளுக்குச் சென்று கற்றவர். இலக்கியம், கணிதம், தத்துவம், அறிவியல் போன்ற பல துறைகளில் தலைசிறந்தவராகத் திகழ்ந்தவர். அவரிடம் கல்வி கற்பதற்காக உலகின் பல பகுதிகளில் இருந்து மாணவர்கள் வந்தனர். பண்டைய கணித நூல்களை எளிமைப்படுத்தி விளக்க உரைகள் எழுதினார். இவர் எழுதிய நூல்கள் பிற்காலத்தில் வந்த விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளுக்கு அடிப்படையாக அமைந்தன.

அறிவும் துணிவும் நிரம்பிய ஹைபேஷியா, ஆண்களைப் போலவே உடை அணிவார். தாமாகவே தேர் ஓட்டிச் செல்வார். எனவே, ஹைபேஷியாவை அன்றைய மதவெறியர்களுக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் தேரில் வந்துகொண்டிருந்தவரை இழுத்து அடித்து உதைத்தனர். ஆடைகளைப் பிய்த்து எறிந்தனர். உயிருடன் தீயிட்டுக் கொளுத்தினர்.

போனது ஹைபேஷியா என்ற உன்னதமான ஒரு பெண்ணின் உயிர் மட்டுமல்ல; உலகத்துக்குச் சொல்ல வேண்டிய எவ்வளவோ விஞ்ஞான ரகசியங்களும் கண்டுபிடிப்புகளும்தாம்!

சுமார் 1650 ஆண்டுகளுக்குப் பின் . . . 1987, இந்தியாவில் உள்ள ராஜஸ்தான். 18 வயது இளம் பெண் ரூப் கன்வர். மால்சிங் என்ற 24 வயது நபரைத் திருமணம் செய்த 8 மாதங்களில், மால்சிங் இறந்து போனார். ரூப் கன்வரின் உறவினர்களும், ஊர்க்காரர்களும் ஏற்கெனவே ஒழிக்கப்பட்ட ‘சதி’ என்ற உடன்கட்டை ஏறுதலை அரங்கேற்றி, தங்கள் கோர முகத்தை இன்னொரு முறை உலகத்துக்குக் காட்டிக்கொண்டனர். வேடிக்கை பார்க்க வந்த ஆயிரக்கணக்கானவர்களின் கண்களுக்கு எதிரே, காப்பாற்ற யாருமின்றி, கதறியபடியே ரூப் கன்வர் நெருப்பில் எரிந்து, கருகிப் போனார்.

ஒரு பெண்ணை வலுக்கட்டாயமாகச் சாகடித்த பிறகு, 'சதி மாதா' என்று கொண்டாடும் கொடிய உலகம் இது.

இன்றைக்குச் சதி இல்லை. ஆணைப் போல் உடை அணிவதில் பிரச்சினை இல்லை. இன்னும் பல இல்லைகள், மேலும் பல உண்டுகள். ஆணுக்கு நிகர் என்று ஆண்களில் சிலரேகூட எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிடத் தயார்.

இன்று பெண்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள் அனைத்தும் ஆண்களுக்கும் உண்டு. சந்தேகமில்லை. ஆனால் ஆண்களுக்கு இல்லாத ஒரு பிரச்சினை பெண்களுக்கு உண்டு. அதுதான் இன்னும் தன் ஆக்டோபஸ் கைகளால் இறுக்கமாக அழுத்திப் பிடித்து வைத்திருக்கிறது.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது பெண்களைத் தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகளுக்கு எதிரான செயற்பாடுகள், கோட்பாடுகளின் தொகுப்பாகும். ஆண் பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகவும் இது வரையறுக்கப்படுவதுண்டு.



## செயல்பாடுகள்

**விழிப்புணர்வு வாக்கியங்கள் எழுதுக.**

* பெண்கள் நாட்டின் கண்கள் - இது போன்ற பெண்மை விழிப்புணர்வு வாக்கியங்கள் எழுதுங்கள்.

**வினாநிரல் தயாரியுங்கள்.**

* உப-மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவியிடம் நேர்முகம் காண்பதற்கான ஒரு வினாநிரல் தயார்செய்க.

**சிறுகுறிப்பு எழுதுங்கள்.**

* உடன்கட்டை ஏறுதல், ரூப் கன்வர்

# புதுமைப் பெண்கள்


பாட்டி சொன்னாள்
நாங்கள் அடுப்படியில்
அடங்கிக் கிடந்த காலம்
பொற்காலம் என்று!

பேத்தி சொன்னாள்
நீ அடங்கி இருந்ததால்
தாத்தா ஐந்தாறு பெண்களை
அஞ்சாமல் மணந்தார்!
என் கணவர்
அடுத்த பெண்ணிடம்
பேசுவதற்குக் கூட
என்னிடம் அனுமதி கேட்பார்!
எங்கள் வாழ்வில்
ஒருவனுக்கு ஒருத்தியாய்
ஒற்றுமையாய்
காலம் கழிக்கும்
எங்கள் காலம் தான்
பொற்காலம் என்றாள்!


பாரதியின்
புதுமைப்பெண்கள்
புதுயுகம்
படைக்கின்றனர்!

பாரதிதாசனின்
புரட்சிப்பெண்கள்
புதுயுகம்
படைக்கின்றனர்!
பாரதிதாசனின்
புரட்சிப் பெண்கள்
சாதனைகள் சாதிக்கின்றனர்!
மதியோடு
பெண் இருக்கிறாள்
அதனால்தான்
மதிப்பெண்ணிலும்
முதலிடம் பெற்று
மதிப்புப் பெறுகிறாள்!
பணிப் பெண்கள்
பணியைப் பாங்காய்ச்
செய்வதனால்
எல்லாப் பணியிலும்
பணிப் பெண்ணே
இடம் பெறுகிறாள்
பெண்கள்
யாரையும் நம்பியதில்லை
தன்னையே நம்புகிறாள்!
தன்னம்பிக்கை இருப்பதால்.

– ஈஸ்வரி. ஏ. ஆர்













# பெண்மை



சாத்தி ரங்கள் பலபல கற்பராம்;
சவுரி யங்கள் பலபல செய்வராம்;
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்;
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்;
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்;
ஏத்தி ஆண்மக்களே போற்றிட வாழ்வராம்;
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ!

– பாரதியார்



## செயல்பாடுகள்

### சொற்பொழிவு ஆற்றுவோம்.

- 'புரட்சிப் பெண்கள்' என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவதற்காகக் கருத்துகளைத் திரட்டுங்கள். வகுப்பிலும் பள்ளி இலக்கிய மன்றங்களிலும் சொற்பொழிவு ஆற்றுங்கள்.

### ஒப்பீடு செய்வோம்

- புதுமைப் பெண்கள், பெண்மை என்ற இரண்டு கவிதைகளையும் ஒப்பீடு செய்யுங்கள்.
- பெண்மையைப் போற்றும் கவிதைகளைச் சேகரித்துக் கவிதைத் தொகுப்பு ஒன்று உருவாக்குங்கள்.

# சாதனைப் பெண்மணிகள்

## நவமணிகள்

*பல சோதனைகளையும் வேதனைகளையும் வென்று சாதனை படைத்த நவமணிகள் இவர்கள்.*

### அன்னை தெரேசா



அன்னை தெரேசா

எளிமைக்கு எழில் கொடுத்து, ஏழைகளையும், எளியவர் களையும், வறுமையில் வாடியவர்களையும் ஆதரித்துத் தம் செயல்பாட்டால் உலகின் சிறந்த பரிசாகிய நோபல் பரிசை 1979 இல் வென்று அனைவராலும் அன்னை என்று அன்புடன் அழைக்கப்பட்டவர் அன்னை தெரேசா. அவர் மனிதத்தைப் புனிதமாக்கிய புனிதவதி.

### இந்திரா பிரியதர்ஷினி



இந்திரா பிரியதர்ஷினி

ஆண்களே அலுத்துக் கொள்ளும் அரசியலில் தம் துணிச்சலான ஆட்சியால் துயரங்கள் எத்துணை வந்தும் துவண்டுவிடாமல் மிடுக்கு நடை போட்டவர். பாரதத்தின் முதல் பெண் பிரதமர். சொந்தப் பாதுகாவலனின் துப்பாக் கிக்குப் பலியானவர், மானுடம் போற்றும் அன்னை இந்திரா காந்தி. இவரது நினைவாக இந்திரா காந்தி அமைதிப் பரிசு வழங்கப்படுகிறது.

### கல்பனா சாவ்லா



கல்பனா சாவ்லா

1961 ஜூலை 1 இல் பிறந்தார். 2003 பிப்ரவரி 1 ஆம் தேதி விண்வெளிப் பயணம் செய்த முதல் இந்தியப் பெண் மணி. விண்ணோட்டத்தில் பறந்து பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது விண்கலம் வெடித்ததில் உயிர் பிரிந்தது. இவரைக் கவுரவிக்கும் பொருட்டு நியூயார்க் நகரில் ஒரு சாலைக்கு இவர் பெயரிடப்பட்டுள்ளது.



பச்சேந்திரி பால்

## பச்சேந்திரி பால்

உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரத்தைச் சென்றடைந்த முதல் பெண்மணி பச்சேந்திரி பால். உத்ராஞ்சல் மாநிலம் கர்வாலுக்கு அருகிலுள்ள நாக்குறி என்ற இடத்தில் 24 – 5 – 1954 இல் பிறந்தார். அர்ஜுனா, பத்மஸ்ரீ விருதுகள் பெற்றவர்.

## கிரண்பேடி ஐ.பி.எஸ்

இந்தியாவின் முதல் பெண் ஐ.பி.எஸ் அதிகாரி. கடமை உணர்வுடன் கண்ணியமாகச் செயல்பட்ட கடமைப் பெண்மணி. இந்தியக் காவல் பணியில் 1972 ஆம் ஆண்டு சேர்ந்த முதல் பெண் அதிகாரியாவார். 1994 ஆம் ஆண்டு மதிப்பு மிக்க ரமன் மகசேசே விருது பெற்றார்.



கிரண்பேடி ஐ. பி. எஸ்

## எம். எஸ். சுப்புலெட்சுமி



எம்.எஸ்.

சண்முக வடிவு சுப்புலெட்சுமி 1916 செப்டம்பர் திங்கள் 16 ஆம் தேதி பிறந்தவர். கர்நாடக இசையில் தனக்கெனத் தனி யிடம் பிடித்தவர். நமது நாட்டின் மிகச் சிறந்த பரிசுகளான பத்ம பூஷன், பத்ம விபூஷன், பாரத ரத்னா உட்பட 20 விருதுகளைப் பெற்றுள்ள இசைவாணி. டிசம்பர் திங்கள் 11 ஆம் நாள் 2004 ஆம் ஆண்டு இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார்.

## பாத்திமா பீவி

உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி. இவர் தமிழகத்தில் கவர்னராகவும் பணிபுரிந்துள்ளார். கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்.



பாத்திமா பீவி



கேப்டன் இலட்சுமி

## கேப்டன் இலட்சுமி சேகல்

1914 இல் பாலக்காடு மாவட்டத்தில் ஆனக்கரையில் பிறந்தார். 1938 இல் சென்னை மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்றார். நேதாஜி, சுபாஷ் சந்திரபோஸின் (I.N.A) இந்திய தேசியப் படையின் அதிகாரி யாக (கேப்டன்) இலட்சுமி சேகல் பணியாற்றினார். தனது 97 வது வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

## சகுந்தலா தேவி


சகுந்தலா தேவி

கணித மேதை. கணினியைவிட வேகமாகக் கணக்குகளைச் செய்யும் திறமை பெற்றவர். அதற்காக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றவர். மனிதக் கணினி என அழைக்கப்படுபவர். தோற்றம் 4-11-1929; மறைவு 21-4-2013.



## செயல்பாடுகள்

### இணைத்துப் படிப்போம்

| | | |
|---|---|---|
| மனிதத்தைப் புனிதமாக்கியவர் | - | லட்சுமி |
| இந்தியாவின் முதல் பெண் பிரதமர் | - | அன்னை தெரேசா |
| மனிதக் கணினி | - | கிரண்பேடி |
| முதல் பெண் நீதிபதி | - | எம்.எஸ்.சுப்புலெட்சுமி |
| சிகரம் தொட்டவர் | - | இந்திரா காந்தி |
| கடமைப் பெண் | - | கல்பனா சாவ்லா |
| இசைக்குயில் | - | பச்சேந்திரி பால் |
| விண்வெளிப் பெண் | - | பாத்திமா பீவி |
| ஐ. என். ஏ அதிகாரி | - | சகுந்தலா தேவி |

# பெண்கள் நாட்டின் கண்கள்

ஒரு சமுதாயம் நலம்பெறச் சிந்தனையாளர்கள், விஞ்ஞானிகள் வேண்டும். நாட்டுப்பற்று மிக்க இளைஞர்கள் வேண்டும். நாட்டு நலன் கருதும் நல்ல தலைவர்கள் வேண்டும். எல்லாரையும்விடத் தொலைநோக்குப் பார்வை கொண்ட பெண்கள் வேண்டும். இவர்கள் அத்தனைபேரின் கூட்டு முயற்சியால்தான் சமுதாயம் வளம் பெறும்! வளர்ச்சியடையும்.

நம் நாடு இன்று மதத்தின் பெயரால், மொழியின் பெயரால், இனத்தின் பெயரால் பிளவுபட்டுக் காணப்படுகிறது. ஒன்றுபட்ட சமுதாயம் உருவாக வேண்டுமென்றால் பெண்கள் சிந்திக்கத் துவங்க வேண்டும்! பெண்கள் விழிப்புணர்வு பெற வேண்டும்! பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும்.

இன்று கல்விப் பணியாற்றும் மாபெரும் பணியைச் சிறப்புடன் செய்வது பெண்கள் தான். பண்டித ஜவஹர்லால் நேரு விழா ஒன்றில் பேசும்போது ஒரு நாட்டினுடைய எதிர்காலம் வகுப்பறைகளில்தான் நிர்ணயம் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார். அவரது கருத்தை மனதில் கொண்டுதான் கல்விப்பணி என்னும் புனிதப்பணியைப் பெரும்பாலும் பெண்களே செய்கின்றனர். தரமான மாணவர்களை நம் தாய் மண்ணுக்கு உருவாக்கித் தருகின்றனர்.

மருத்துவத்துறை இன்று வியத்தகு முறையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. இப்பணியில் ஈடுபடுவோர் கிட்டதட்ட 90 விழுக்காடு பெண்களாகத்தான் இருக்க முடியும். அழுகிய புண்களையும் உடைந்த எலும்புகளையும் முகம் கோணாமல் சுத்தம் செய்து சீர் செய்வதும் ஏழை பணக்காரர் பாகுபாடின்றித் தாயுள்ளத்தோடு பணி செய்வதும் பெண்களே. அன்னை தெரேசா, பிளாரன்ஸ் நைட்டிங்கேல் போன்ற அன்னையர்களின் அடியொற்றி இப்பணியைப் பெண்கள் செய்யவில்லை என்றால் நம் சமுதாயம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மக்கள் சுத்தமான காற்றைச் சுவாசிக்க வேண்டும். சுகாதாரமாக வாழ வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு சுற்றுப்புறங்களையும், சமுதாயத்தையும் துப்புரவு செய்யும் புனிதப் பணியைச் செய்வதும் பெண்கள்தாம்.

'கொடிது கொடிது வறுமை கொடிது' என்னும் ஔவையின் வரிகளை உணர்ந்து வறுமையற்ற சமுதாயம் படைக்கும் பணியை இன்று பெண்கள் கருத்துடன் செய்து வருகின்றனர்.

உள்ளாட்சி அமைப்புகளில் இன்று மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பெண்களாக இருப்பதால்தான் ஓரளவு சிறப்பான மக்கள் பணி நடைபெற்று வருகின்றது. மக்களவையிலும், மாநிலங்களவையிலும், சட்டப்பேரவைகளிலும் மூன்றிலொரு பங்கு பெண்கள் இடம் பெறும்போது நமது சமுதாயம் முழு வளர்ச்சியடையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

> 'பட்டங்களாளவும் சட்டங்கள் செய்யவும்
> பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'

என்ற பாரதியின் வரிகளுக்கிணங்க இன்று பெண்களது ஆட்சிப்பணி சிறப்புடையதாக இருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களின் பங்கு இன்றியமையாதது. அது போன்றுதான் சமுதாயத்திலும். உலக அளவில் அறிவியல், தொழில்நுட்பம், விளையாட்டு, அரசியல் என அனைத்துத் துறைகளிலும் இன்று இந்தியப் பெண்மணிகள் சாதனைகள் படைத்து வருகின்றனர். நம் நாட்டிற்குப் பெருமைதேடித் தருகின்றனர்.

பெண்கள் இந்த நாட்டின் கண்கள்
பெண்கள் உலகைத் தாங்கி நிற்கும் தூண்கள்.



## செயல்பாடுகள்

**இவர்கள் மிளிர்வது எந்தத் துறையில்.**

* அருந்ததி ராய்
* சுதாசந்திரன்
* மேரிகோம்
* ஹரிதா வி. குமார்
* பி.டி.உஷா

**பட்டிமன்றம் நடத்துவோம்.**

பெண்களுக்குச் சம உரிமை உள்ளதா? இல்லையா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்துங்கள்.

| உள்ளது | இல்லை |
|---|---|
| கல்வியில் ஆண்களை விட முன்னிலை | வரசதட்சணை |
| ஆட்சி அமைப்புகளில் பங்கு | பெண்கொடுமைகள் |
| வேலைக்குச் செல்லும் முடிவு | உழைப்புக்கான ஊதியம் இல்லை |
| பல்வேறு துறைகளிலும்... | கல்வியில் முன்னுரிமை குறைவு |

நான் கற்றுக்கொண்டவை

இந்த அலகைக் கற்றபோது நான் செய்த செயல்பாடுகள்?

*
*
*
*

என்னால் நன்றாகச் செய்ய முடிந்த செயல்பாடுகள். எதனால்?

*
*
*
*

## மூவகைப் போலி

ஆசிரியர் : காலாண்டுவிடுமுறை முடிந்து இன்று நாம் யாவரும் பள்ளிக்கூடத்திற்கு வந்துள்ளோம். மாணாக்கரே! உங்கள் யாவரையும் அன்போடு வரவேற்கிறேன். விடுமுறையில் யாரேனும் வெளியூர் போயிருந்தீர்களா?

சிவா : ஆமாம் ஐயா. நான் மதுரைக்குப் போயிருந்தேன்.

ஆசிரியர் : அப்படியா? மகிழ்ச்சி. அங்கு என்னவெல்லாம் பார்த்து வந்தாய்?

சிவா : மீனாட்சிஅம்மன் கோவில், திருமலைநாயக்கர் மஹால், வண்டியூர் தெப்பக்குளம் எனப் பல இடங்களைப் பார்த்து வந்தேன். எல்லாம் நன்றாக இருந்தன. பேருந்தில் சென்றேன். பேருந்தில் திருக்குறள் எழுதி வைத்துள்ளார்கள். அதில், 'அறம்' என்பது 'அறன்' என்று இருக்கிறது; 'அகம்' என்பது 'அகன்' என்று இருக்கிறது. இவையெல்லாம் தவறு இல்லையா ஐயா.

ஆசிரியர் : நன்கு கூர்ந்து பார்த்துள்ளாயே சிவா! இவை தவறில்லை. ஓர் எழுத்து வரவேண்டிய இடத்தில் மற்றொரு எழுத்து வந்தாலும் பொருள் மாறவில்லை அல்லவா? இதுபோல் வருவதைப் போலி என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவார்கள்.

அலகு - 4

செல்வி : போலியா? அதைப்பற்றிக் கூறுங்கள் ஐயா.

ஆசிரியர் : போல இருப்பதைப் போலி என்று சொல்கிறோம். இலக்கணத்தில் மூன்று வகைப் போலிகள் உள்ளன. சில பாடல்களில் மஞ்சு (மேகம்) என்பதை மைஞ்சு என்றும், மையல் என்பதை மயல் என்றும் தந்திருப்பார்கள். இவ்வாறு ஒரு சொல்லின் முதல் எழுத்துப் போலியாக வருவதை முதல் போலி என்று சொல்வார்கள்.

சிவா : அப்படியா ஐயா. இடைப்போலி எப்படி வரும்?

ஆசிரியர் : அரசியல் என்னும் சொல் அரைசியல் என்று சிலப்பதிகாரத்தில் வருகிறது. இதுபோல் இலஞ்சி என்ற சொல் இலைஞ்சி என்றும் வருகிறது. இவைபோல் இடையில் உள்ள எழுத்துப் போலியாக வருவதை இடைப் போலி என்பார்கள்.

சிவா : ஐயா. கடைப்போலியை நான் கூறுகிறேன். திருக்குறளில் அறம் என்பது அறன் என வருகிறது. முகம் என்பது முகன் என வருகிறது. இவை எல்லாம் கடைப்போலிகள். சரிதானா ஐயா.

ஆசிரியர் : மிகவும் சரி. சொல்லின் இறுதி எழுத்துப் போலியாக வருவது கடைப் போலி. இதுபோல் சிலர் ஐந்து ரூபாய் என்பதை அஞ்சு ரூபாய் என்று கூறுவார்கள். இவ்வாறு ஒரு சொல்லில் உள்ள எல்லா எழுத்துகளும் போலியாக வருவதை முற்றுப்போலி என்பார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

மாணவ மாணவியர் : நன்றி ஐயா. இன்று முதல்போலி, இடைப்போலி, கடைப் போலி/இறுதிப்போலி, முற்றுப்போலி என்பனபற்றித் தெரிந்து கொண்டோம்.

ஆசிரியர் : இந்தப் போலிகளுக்கு, வேறு எடுத்துக்காட்டுகளைத் திரட்டி வாருங்கள்.

(வகுப்பு நிறைவுபெறுகிறது)

# 5

# வசந்தத்தைத் தேடி



சாதி, மதம், இனம், மொழி இவற்றை எல்லாம் கடந்து மனிதனை மனிதன் மதிக்க வேண்டும். அன்போடு பழக வேண்டும். ஊனமுற்றோர், உறவற்றோர், வறுமையில் வாடுவோர், ஒதுக்கப்பட்டோர், அரவணைப்பு வேண்டுவோர் போன்ற பல்வேறு பிரிவினரிடமும் அன்பு காட்ட வேண்டும். துயருறும் மக்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும்.

**மனித நேய உணர்வு வளரட்டும்!**

**மனங்களில் அன்பு எண்ணம் உயரட்டும்**

# எல்லா உயிரும் என்னுயிரே

## கருணை உள்ளமே! கடவுள் இல்லமே!

சாதிகளிலும் மதங்களிலும் சமயச் சடங்குகளிலும் உழன்று கொண்டிருந்த மக்களை அவற்றிலிருந்து மீட்கச் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை அமைத்தவர் வள்ளலார் எனும் இராமலிங்க அடிகள். புலவர் பெருமக்களாலும் சமூகச் சீர்திருத்தச் செம்மல்களாலும் போற்றப்படும் பெருஞ் சிறப்பினைப் பெற்றவர். வெள்ளாடை அணிந்து அருள் பொழியும் திருமுகம் கொண்ட வள்ளலார் சிதம்பரத்திற்கருகிலுள்ள மருதூரில் 5-10-1823 இல் பிறந்தார்.

வள்ளலார் சென்னையில் சில காலம் வாழ்ந்தார். அங்குள்ள கந்தகோட்டத்து இறைவனை வணங்கி மனமுருகப் பாடி மகிழ்ந்தார். இப்பாடல்களின் தொகுப்பே தெய்வமணிமாலை ஆகும்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
    உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
    உறவு கலவாமை வேண்டும்

என்பது போன்ற அற்புதமான பக்திப் பாடல்கள் கேட்போரை மனமுருகச் செய்யும். இராமலிங்கர் ‘வடிவுடை மாணிக்கமாலை’ என்னும் நூலையும் திருவொற்றியூர் சிவபெருமான் மீது ‘எழுத்தறியும் பெருமான் மாலை’ என்னும் நூலையும் பாடினார்.

**வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலாரின் அறிவுரைகள்**

தந்தை, தாய் மொழியைத் தள்ளி நடக்காதே.
குருவை வணங்கக் கூசி நிற்காதே.
வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழிக்காதே.
மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்யாதே.
நல்லோர் மனத்தை நடுங்கச் செய்யாதே.
பொருளை இச்சித்துப் பொய் சொல்லாதே.
ஏழைகள் வயிறு எரியச் செய்யாதே.
பசித்தோர்க்குப் பிச்சை இல்லை என்னாதே.
தானம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தாதே.

மூட நம்பிக்கைகளாலும் சாதி மத வேறுபாடுகளாலும் மக்கள் துன்புறுவதைக் கண்டு மனம் பதைத்த வள்ளல்பெருமான்,

கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக - எனப் பாடினார்.

ஒருமை வாழ்வு, ஒருமையரசு, ஒருமையுலகம் காண விரும்பிய வள்ளல்பெருமான்,

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்

என வற்புறுத்தினார். சங்கடம் விளைவிக்கும் சாதியையும் மதத்தையும் தவிர்ப்போம் என்றார்.

பெண்ணினுள் ஆணும், ஆணினுள் பெண்ணும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி - என ஆணும் பெண்ணும் சமமென்று அன்றே உரைத்தார்.

**“வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்.”** என்று பயிர்வாடத் தாம் வாடினார். வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவரையும், நீடிய பிணியால் வருந்துவோரையும், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தவர் வள்ளல்பெருமான். இவ்வருத்தம் நீங்கவே, வடலூரில் சத்திய தருமச் சாலையை நிறுவிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். அங்கு அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், அணையாமல் இன்றும் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது.



எல்லா உயிர்களையும் தம்முயிராய்க் கருதித் தொண்டு செய்பவர் உள்ளத்தில்தான் இறைவன் அன்புருவாய் நடம் புரிவான் என்றும் பாடல்கள் பாடி விளக்கினார்.

வள்ளலார் அன்பின் ஊற்று; அன்பே அவர் உயிர்; அன்பே அவர் வடிவம்; மண்ணுலகத்திலே உயிர்கள் படும் வருத்தத்தைக் கண்டும் கேட்டும் அவர் பொறுத்திட மாட்டாமல்

அப்பாநான் வேண்டுதல்கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கு எல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்

என்று உளமுருக வேண்டினார். உயிர்களின் வருத்தத்தை நீக்கிடவே துடித்தார்.

சாதி, மத, சமய இன வேறுபாடு கூடாது. எவ்வுயிரையும் கொல்லலாகாது. புலால் புசித்தல் கூடாது. எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் எண்ணுதல் வேண்டும். ஏழை மக்களின் பசியைப் போக்குதல் வேண்டும். உலக மக்கள் அனைவரையும் உடன் பிறப்புக்களாய் நேசித்தல் வேண்டும் என்பன இவர் தம் மனித நேயச் சிந்தனைகள் ஆகும்.

இராமலிங்கர் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் திருவருட்பா என மக்கள் போற்றுகின்றனர். இவர் உருவ வழிபாட்டை நீக்கி ஒளி வழி பாட்டை வலியுறுத்தினார். அதற்காகவே வடலூரில் சத்தியஞான சபையை நிறுவினார். அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத் தினார். இதனால்தான் பாரதியார் இவரைப் புதுநெறிகண்ட புலவர் என்று போற்றினார்.



உலகெலாம் உய்ய உயரிய நெறிகண்ட அருட்பிரகாச வள்ளலார் 1874 ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாளன்று இறவாநிலை எய்தினார். அந்த அருளாளர் அருளிய வழிகளைக் கடைப்பிடித்தொழுகினால் சாதி, மத, இனவேறுபாடுகள் நீங்கும். போரும் பூசலும் அகலும். அமைதி உலகம் உருவாகும், மனித நேயம் மலரும். அன்பே நிறைந்து ஒருமையுள் உலகம் நிலைக்கும்.



## செயல்பாடுகள்

### வாசிப்போம்; கண்டுபிடிப்போம்.

* வள்ளலாரின் மனிதநேயச் சிந்தனைகள் எவை?
* வடலூரில் உள்ள வள்ளலாரின் சத்திய தர்மசாலையைப் பற்றிக் குறிப்பு எழுதுக?

### முத்திரை வாக்கியங்கள் உருவாக்குவோம்.

மனிதநேயக் கருத்துகளை உணர்த்தும் முத்திரை வாக்கியங்கள் உருவாக்குங்கள்.

* உதிரம் கொடுப்போம்! உயிர்காப்போம்!
* நேசக்கரம் நீட்டுவோம்! பாசப்பயிர் வளர்ப்போம்!

# அன்பு



அன்பு என்னும் வார்த்தையின்
அர்த்தம் என்ன தெரியுமா?
தன்னைப்போலப் பிறரை எண்ணும்
தன்மை என்று புரியுதா?

மண்ணின் ஏக்கம் அறிந்து வான்
மழை கொண்டு அணைப்பதாய்
உண்மை அன்பு பெய்துநாம்
நல்ல உலகை ஆக்குவோம்.

பிறர் துன்பம் கண்டுவீண்
வருத்தம் கொள்ளல் விரயமே
இயன்ற உதவி செய்தலே
பிறந்த பயன் ஆகுமாம்.

அன்பு மலர்த் தோட்டமாய்
அகம் செழிக்க வேண்டுமே
நெடிய பயணம் முழுவதும்
மணம் கமழ வாழ்கவே.

– எஸ். ரவி

## செயல்பாடுகள்

### பாடல் சேகரிப்போம்

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்.

– இது போன்ற மனிதநேயக் கருத்துள்ள பாடல்களைச் சேகரியுங்கள்.

# கண்ணே கண்மணியே

## லூயிஸ் பிரெயில்

1821 ஆம் ஆண்டு சார்லஸ் பார்பியர் என்ற முன்னாள் படைவீரரின் நட்பு லூயிஸ் பிரெயிலுக்குக் கிடைத்தது. சார்லஸ், யுத்தம் நடைபெறும் சமயங்களில் அங்குள்ள படைவீரர்கள், ரகசியத் தகவல்களைப் பேசிப் பரிமாறிக்கொள்ளாமல் சங்கேத மொழியில் பரிமாறிக் கொள்ள ஒரு வழி கண்டுபிடித்தார்.

அந்த முறையில் பன்னிரண்டு புள்ளிகளும் கோடுகளும் காணப்பட்டன. அவற்றைப் பயன்படுத்தி வார்த்தைகளை அடையாளம் தெரிந்து கொண்டு படைவீரர்கள், தகவல்களைப் புரிந்துகொண்டனர், தகவல்களை அனுப்பினர்.



பிரெயில், சார்லஸ் பார்பியரின் முறையை எளிமையாக்கினார். பன்னிரண்டு புள்ளிகளை ஆறு புள்ளியாகக் குறைத்து, கோடுகளையும் நீக்கி எளிமையாகவும் புதுமையாகவும் வடிவம் கொடுத்தார். அப்போது லூயிஸுக்கு வயது பதினைந்துதான்.

பிரெயில் முறையில் தயாரித்த முதல் புத்தகத்தை 1829 ஆம் ஆண்டு வெளியிட்டார். 1837 ஆம் ஆண்டில் இந்த பிரெயில் முறையில் கணிதத் துக்குத் தேவையான சில குறியீடுகளையும் சேர்த்துக் கொண்டார்.

பிரெயில் மிகச் சிறந்த இசைக் கலைஞர். பியானோ, ஆர்கன் போன்ற இசைக் கருவிகளை நன்றாக வாசிப்பார்.


இத்தகைய உன்னதமான பிரெயிலின் கண்டுபிடிப்பு அவர் வாழ்ந்த காலக்கட்டத்தில் பிரபலமாகவில்லை. அந்த முறையின்மீது மக்களுக்குப் பெருமளவு நம்பிக்கை ஏற்படவில்லை.

அவர் பணியாற்றிய கல்வி நிலையங்களிலேயே, சில சமயங்களில் இந்த முறைக்கு எதிர்ப்பு எழுந்தது. இருப்பினும் மனம் தளராமல் தன்னுடைய புதிய முறையான பிரெயில் கல்வி கற்கும் முறையைப் பார்வையற்றவர்களிடையே விடாமுயற்சியுடன் பரப்பி வந்தார்.

1852 ஆம் ஆண்டு தன்னுடைய நாற்பத்துமூன்றாம் வயதில் லூயிஸ் பிரெயில் காலமானார்.

அவரது மறைவுக்குப் பிறகு அவருடைய கண்டுபிடிப்பின் சிறப்பை மக்கள் உணரத் தொடங்கினர். பார்வையற்றவர்களிடையே இந்த முறை வெகு விரைவாகப் பரவியது.

1868 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டிலுள்ள பார்வையற்றோர்களுக்கான தேசியக் கழகத்தைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டர்கள் பிரெயில் எழுத்து முறையின் பெருமையை உலகமெங்கும் பரப்ப ஆரம்பித்தனர். இன்று உலகம் முழுவதும் பல மொழிகளில் பிரெயில் வடிவம் கடைப் பிடிக்கப்படுகிறது.




பிரெயில் முறையில் தயாரிக்கப்படும் புத்தகங்கள் நீளத்திலும் அகலத்திலும் பருமனிலும் பிற புத்தகங்களை விடச் சற்றுப் பெரிய அளவில் இருந்தாலும் அதை ஒரு குறையாக யாரும் கருதவில்லை.

பிரெயிலின் கண்டுபிடிப்பு ஒரு பெரிய சமுதாய மாற்றத்தையே ஏற்படுத்தியது. உலக அளவில் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ள, சிறந்த அறிவாற்றல் பெற வழிகாட்டிய லூயிஸ் பிரெயிலைப் பார்வையற்றவர்கள் நினைவில் வைத்துப் போற்றி வருகின்றனர்.



## செயல்பாடுகள்

### வாசிப்போம்; கண்டுபிடிப்போம்

* பிரெயில் எழுத்து முறையை உலகெங்கும் பரப்பியவர்கள் யார்?
* லூயிஸ் பிரெயிலிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?

### கடிதம் எழுதுவோம்.

* உங்கள் பகுதியில் வாழும் நடக்க இயலாத மாற்றுத்திறனாளி ஒருவருக்கு மூன்று சக்கர சைக்கிள் கொடுத்துதவ வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

# மகாதானம்

விழிகள் இரண்டும் பழுதானால்
வெளிச்சமும் இருட்டும் ஒன்றாகும்
பழுதுகள் இன்றி விழிகளைநாம்
பாது காப்பது நன்றாகும்.

கண்களை இழந்து தவிப்போர்க்கு
கண்களைத் தானம் செய்திடுவோம்
கண்ணீர் துடைக்கக் கைகொடுப்போம்
கண்ணொளி பெற்றிடக் கண்கொடுப்போம்

இருண்ட விழிகளில் ஒளியேற்ற
எழுச்சி யுடனே வாருங்கள்
பெருமை யோடு கண்ணிரண்டைப்
பார்த்திட நீங்கள் தாருங்கள்

இறந்த பின்பும் நம்கண்கள்
இந்த உலகைப் பார்க்கட்டும்
திறந்த விழிகள் நன்றியுடன்
தினம்தினம் நம்மை வாழ்த்தட்டும்

– நா. இராதாகிருட்டிணன்.



## உலக ஆரோக்கிய தினங்கள்

*ஜனவரி 10 - உலகச் சிரிப்பு தினம்*
*ஜனவரி 30 - உலகத் தொழுநோய் தினம்*
*மார்ச் 24 - உலகக் காசநோய் தினம்*
*ஏப்ரல் 7 - உலக ஆரோக்கிய தினம்*
*மே 3 - உலக ஆஸ்துமா தினம்*
*மே 31 - புகையிலை எதிர்ப்புத் தினம்*
*ஜூன் 14 - உலக ரத்ததான தினம்*
*ஜூலை 11 - உலக மக்கள் தொகை தினம்*
*செப்டம்பர் 22 - ரோஸ் தினம் (புற்று நோயாளிகளின் நலனுக்காக)*
*செப்டம்பர் 26 - காது கேளாதோர் தினம்*
*அக்டோபர் 1 - சர்வதேச முதியோர் தினம்*
*அக்டோபர் 15 - உலகக் கண்பார்வையற்றோர் தினம்*
*நவம்பர் 14 - சர்க்கரை நோய் தினம்*
*நவம்பர் 17 - தேசிய மறதி நோய் தினம்*
*டிசம்பர் 1 - உலக எய்ட்ஸ் தினம்*
*டிசம்பர் 3 - உலக ஊனமுற்றோர் தினம்.*



### செயல்பாடுகள்

**பேச்சுப்போட்டி** - முன்னேற்றத்திற்கு உடல்குறைபாடு ஒரு தடையில்லை என்ற தலைப்பில் பேசுவதற்குக் கருத்துகளைச் சேகரியுங்கள். பேச்சுப்போட்டி நடத்துங்கள்.

### அழைப்பிதழ் தயாரிப்போம்.

உங்கள் பள்ளியில் நடைபெறும் இலவசக் கண்சிகிச்சை முகாமிற்கான அழைப்பிதழ் தயாரியுங்கள்.

# தாங்க மறந்த விழுதுகள்

## விழுதுகள்

**அம்மா, எவ்வளவு நாளா இந்தக் காப்பகத்தில் இருக்கீங்க?**

சாந்தம்மா : மூணு வருஷமாச்சு.நானும் என் கணவனும் சேர்ந்தே தங்கியுள்ளோம். ஐந்து மகன்கள் இருந்தும் ஆதரவு இல்லாததால் காப்பகத்துக்கு வந்துவிட்டோம்.

கடைசிக் காலத்தில், நான் ஒரு பையன் வீட்டில், என் கணவர் இன்னொரு பையன் வீட்டில் என்று, பராமரிப்பு என்ற பெயரில் வேலையாட்களாகப் பணிபுரிந்தோம்.

மாதத்திற்கு ஒருமுறைதான் சந்தித்துக்கொள்ள முடியும். அவரை விட்டு விட்டுத் தனியாக இருக்க முடியல. நான் வீட்டைத் துடைக்கலாம். அவரால் முடியுமா? அதனால்தான் வந்து விட்டோம்.




**அம்மா உங்க மகன்கள் என்ன வேலை செய்றாங்க?**

சாந்தம்மா : எல்லோரும் நல்ல வேலையில்தான் இருக்காங்க. சொந்த வீடு, கார் என எல்லாம் இருக்கு. ஐந்து பேரின் திருமணத்திற்குப் பிறகு சொத்தைப் பிரித்துக் கொடுத்தோம். எல்லாமே பிள்ளைகளுக் குத்தானே என்று கபடமில்லாமல் கழுத்தில் போட்டி ருந்தது முதல் கணக்கு வைத்துப் பிரித்துக் கொடுத் தேன். இன்று, காப்பகத்தில் கிடக்கிறோம்.

**நீங்க உங்க பேரக் குழந்தைகளைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு?**

சாந்தம்மா : எனக்கு மூன்று பேரன், ஐந்து பேத்திகள். என் பேரக் குழந்தைகளுக்குத் தாத்தா என்றால் ரொம்பப் பிடிக்கும். அவர் நிறைய கதை சொல்லுவார். நான் தான் சாப்பாடு ஊட்டுவேன்.

எந்தக் குழந்தையைப் பார்த்தாலும் பேரக்குழந்தைகளின் நினைப்புதான் வரும். நான் அவருகிட்ட சொன்னதில்லை. இனி யார் மீதும் குற்றம் சுமத்த விரும்பவில்லை. என் பிள்ளைகளும் பேரக் குழந்தைகளும் நல்லா இருக்கணும். அதைத் தான் கடவுள் கிட்ட வேண்டிக்கிறேன்.

**இதுபோன்ற காப்பகங்கள் அதிகரிக்கக் காரணம் என்னன்னு நினைக்கிறீங்க அம்மா?**

சாந்தம்மா : அந்தக் காலத்துல, என் மாமியார் 75 வயசுலதான் இறந்தாங்க.அவங்க இருந்த வரைக்கும் வீட்டுப்பொறுப்பை எடுத்துச் செய்றது, பண விவகாரம் எல்லாம் அவங்கதான்.

அப்போ மூத்தவங்கள மதிச்சோம். இப்போ வயசாயிட்டா பெத்தவங்க கூட பாரமாகிடுறாங்க. நாளைக்கு அவங்களுக்கும் வயசாகிடும்கிறது தெரியல.

எங்கள மாதிரி பிள்ளைகளால் ஒதுக்கப்பட்டவர்கள் இருக்கிறவரைக்கும் காப்பகங்கள் இருக்கணும். இல்லாட்டி தெருவுலதான் நிக்கணும்.

**நீங்க என்னம்மா எதிர்பார்க்கிறீங்க?**

சாந்தம்மா : வயிறு நிறைய மூணு வேளையும் சாப்பிட்டே ரொம்ப நாளாயிடுச்சு. வயிறும் பசிக்கல. பசி அதிகமாயிட்டா கதவுக்குப் பக்கத்தில் வந்து நின்னு தெருவுல போற குழந்தைகளைப் பார்த்துட்டே இருப்பேன்.

பேரக் குழந்தைகளைப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு. அவங்களோட ஒரு நாள் முழுவதும் இருந்தா..., அந்த நாளை நினைத்து...... (அழுகிறார்)

அப்போது அவரது கணவர் வந்து புலம்பாதம்மா எனச் சொல்லி, அழைத்துச் சென்றார்.

அவரிடம் பேசிவிட்டு நகர்ந்தபோது மனம் கனத்தது.

> கேரளமாநிலத்தில் உள்ள சில முதியோர் காப்பகங்கள்
>
> மித்ர நிகேதன், வெள்ளநாடு, திருவனந்தபுரம்,
>
> ராஜீவ்காந்தி நினைவு முதியோர் இல்லம், ஆலப்புழை.



## செயல்பாடுகள்

### குறிப்பு எழுதுங்கள்

- பிள்ளைகளால் கைவிடப்பட்ட அம்மாவின் வேதனைகளை எழுதுங்கள்.
- கைவிடப்பட்ட நிலையிலும் யார்மீதும் குற்றம் சுமத்த விரும்பாத தாய் தந்தையரின் மனநிலைகளைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.

# முதியோர் இல்லங்கள்

வாழும் தெய்வங்கள்
கூடி வாழ்வதால்
கோயில்களாகின்றன
முதியோர் இல்லங்கள்!

புதியன புகுதலும்
பழையன கழிதலும்....
பொருள் வேறாய்ப்
புரிந்து கொண்டவர்களின்
மண உறவு
பெற்றவர்களின் மன முறிவு

இருந்த கடவுளை
துரத்தி விட்டு
எதையோ தேடுவான்
பூஜை அறையில்...

அன்று
தந்தைகள் கான்வென்டில்
கட்டிய தொகைகள்-இன்று
பிள்ளைகளால்
தவணை முறையில்
சேர்க்கப்படுகின்றன...
வயோதிகர் காப்பகங்களில்

பூட்டிய வீட்டிற்கு
காவல் காக்க
நாயை வளர்ப்பான்
ஈன்ற தாயை மட்டும்
ஏதோவொரு
முதியோர் இல்லத்தில் சேர்ப்பான்!

– நாவிஷ் செந்தில்குமார்



## செயல்பாடுகள்

### வாசிப்போம்; கண்டுபிடிப்போம்

* முதியோர் காப்பகங்கள் அதிகரிக்கக் காரணங்கள் எவையென்று சாந்தம்மாள் கூறுகிறார்?

### மலர் தயாரிப்போம்

* வார, மாத இதழ்களிலிருந்து சாதனை புரிந்த மாற்றுத்திறனாளிகள் பற்றிய செய்திகள் படங்கள் சேகரியுங்கள். மலராக வெளியிடுங்கள்.

நான் கற்றுக்கொண்டவை

இந்த அலகைக் கற்றபோது நான் செய்த செயல்பாடுகள்?

*

*

*

*

என்னால் நன்றாகச் செய்ய முடிந்த செயல்பாடுகள். எதனால்?

*

*

*

*

# அகரமுதலி

**அ**

அழுக்காறு - பொறாமை

அருஞ்சமம் - கடும் போர்

அஸ்திவாரம் - அடிக்கட்டுமானம்

**ஆ**

ஆகிருதி - உடம்பு

ஆனிரை - பசுக்கூட்டம்

**இ**

இடும்பை - துன்பம்

இலக்குகள் - குறி

இழுக்கும் - பற்றாக்குறை நிலையில்

இன்முகம் - சிரித்தமுகம்

**ஈ**

ஈனுதல் - கன்று போடுதல் / குட்டி போடுதல் / குழந்தை பெறுதல்

**உ**

உஷ்ணம் - வெப்பம்

**ஊ**

ஊண் - உணவு

**எ**

எய்துதல் - அடைதல்

**ஏ**

ஏகாந்தம் - தனிமையும் அமைதியும் நிறைந்தது

**ஐ**

ஐதீகம் - காலம் காலமாக இருந்து வரும் கருத்து /நம்பிக்கை

**க**

கடனான - கடமையான

ககனசித்தர் - சித்தர்கள்

கதிரோன் - சூரியன்

களிறு - ஆண் யானை

காளை - காளை மாடு, ஆண் மகன்

கானவர் - காட்டில் வசிப்போர்

காயசித்தி - அழிவில்லாத உடல்

கிழவோன் - உரிமையுடையோன்

குசலம் - நலம்

குருதி - இரத்தம்

**ச**

சமச்சீர் - ஒரேபோன்று சீரான

சமத்துவம் - எல்லாம் ஒரேபோன்ற

சதம் - நூறு

சான்றோன் - மேன்மையானவர்

சீர் - அழகு, மதிப்பு

சீண்ட - துன்புறுத்த, தொட

சீரழிவு - ஒழுக்கமின்மை

சீற்றம் - கோபம், ஆவேசம்

சீர்கேடு - ஒழுக்கக்கேடு

சுரண்டல் - கவர்தல், அபகரித்தல்

சூறாவளி - பெருங்காற்று

சேதம் - அழிவு

**த**

தும்புகள் - தூசிகள்

**ந**

நச்சுக்காற்று - தீயகாற்று

நல்கல் - வழங்குதல்

நுண்துகள் - மிகச்சிறிய தூள்

**ப**

பரி - குதிரை

பவனி - ஊர்வலம்

பிரளயம் - வெள்ளப் பெருக்கு

பிராணவாயு - மூச்சுக் காற்று

பிறை - நிலாக் கீற்று

பேரிடர் - பெரும் அழிவு, பெரும் துன்பம்

**ம**

மந்தி - பெண்குரங்கு

மசூதி - இஸ்லாமியப் பள்ளிவாசல்

**வ**

வாஸ்தவம் - உண்மை

வியப்பு - அதிசயம்

அலகு - 5